வெற்றி நிச்சயம்

சுராவின்

# TNPSC

ஒருங்கிணைக்கப்பட்ட

# GROUP-IV

**CCSE-IV** (எஸ்.எஸ்.எல்.சி. தரம்)

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-4 (தொகுதி-IV)

# பொது அறிவு மற்றும்

# திறனறிவும் மனக்கணக்கு நுண்ணறிவும்

# தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு

| பகுதி-அ தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு | |
|---|---|
| இலக்கணம் | 25 கேள்விகள் |
| சொல்லகராதி | 15 கேள்விகள் |
| எழுதும் திறன் | 15 கேள்விகள் |
| கலைச் சொற்கள் | 10 கேள்விகள் |
| வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன் | 15 கேள்விகள் |
| எளிய மொழி பெயர்ப்பு | 5 கேள்விகள் |
| இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும் | 15 கேள்விகள் |

| பகுதி-ஆ பொது அறிவு | |
|---|---|
| பொது அறிவியல் | 5 கேள்விகள் |
| புவியியல் | 5 கேள்விகள் |
| இந்திய வரலாறு, பண்பாடு மற்றும் தேசிய இயக்கம் | 10 கேள்விகள் |
| இந்திய ஆட்சியியல் | 15 கேள்விகள் |
| இந்தியப் பொருளாதாரம் மற்றும் தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம் | 20 கேள்விகள் |
| தமிழ்நாட்டின் வரலாறு, மரபு, பண்பாடு மற்றும் சமூக-அரசியல் இயக்கங்கள் | 20 கேள்விகள் |
| **பகுதி-இ திறனறிவும் மனக்கணக்கு நுண்ணறிவும்** | |
| திறனறிவு | 15 கேள்விகள் |
| மற்றும் காரணவியல் | 10 கேள்விகள் |

TNPSC
GROUP-IV
**2025**
ஒரிஜினல் வினாத்தாள் விளக்கமான விடைகளுடன்


வீ.வீ.கே. சுப்புராசு

செ. சசிகலா தேவி, M.A., M.Phil (Tamil), PGDLA


TNPSC
டிசம்பர் 2024-இல் வெளியிட்ட புதிய பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது


சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்

சென்னை

B 1170

© வெளியீட்டாளர்கள்

TNPSC CCSE-IV **ஒருங்கிணைக்கப்பட்ட** GROUP-IV (Tamil)

**வீ.வீ.கே. சுப்பராசு**

**ISBN: 978-93-6417-634-7**
**Code : B 1170**

(வெளியீட்டாளர்களின் எழுத்து மூலமான அனுமதி இன்றி இப்புத்தகத்தை மறுபதிப்புச் செய்யவோ, வேறு மொழிகளில் மொழிபெயர்க்கவோ, அச்சடிக்கவோ, போட்டோகாபி செய்யவோ கூடாது)

**சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்**

**தலைமை அலுவலகம்:** 1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை-600 040.
☎ 91-44-48629977

**சங்கர் பிரிண்டர்ஸ், சென்னை-600 042-இல்** அச்சடிக்கப்பட்டு,
**சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்,** 1620, 'ஜே' பிளாக், 16–ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை – 600 040 இல்
**திரு. வீ.வீ.கே. சுப்புராசு** அவர்களால் வெளியிடப்பட்டது.
தொலைபேசி எண் : 91–44–48629977.
email: suracollege@gmail.com; enquiry@surabooks.com; website: www.surabooks.com

# பொருளடக்கம்

பக்கம்


❖ **TNPSC Group-IV** தேர்வு
ஒரிஜினல் வினாத்தாள் விளக்கமான விடைகளுடன் – 2025 1 – 48


பகுதி-அ

## தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு


தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு .............................................. 1 - 384


பகுதி-ஆ

## பொது அறிவு


பொது அறிவியல் (5 கேள்விகள்) 1 - 160

புவியியல் (5 கேள்விகள்) 1 - 96

இந்திய வரலாறு, பண்பாடு மற்றும்
இந்திய தேசிய இயக்கம் (10 கேள்விகள்) 1 - 128

இந்திய ஆட்சியியல் (15 கேள்விகள்) 1 - 80

இந்தியப் பொருளாதாரம் மற்றும்
தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம் (20 கேள்விகள்) 1 - 176

தமிழ்நாட்டின் வரலாறு, மரபு, பண்பாடு மற்றும்
சமூக-அரசியல் இயக்கங்கள் (20 கேள்விகள்) 1 - 96

TNPSC Group IV முந்தைய தேர்வுகளில் கேட்கப்பட்ட வினாக்கள் மற்றும்
தேர்வில் எதிர்பார்க்கப்படும் முக்கிய வினாக்கள் 1 - 16


பகுதி-இ

## திறனறிவும் மனக்கணக்கு நுண்ணறிவும்


திறனறிவு (15 கேள்விகள்) மற்றும் .............................................. 1 - 32
காரணவியல் (10 கேள்விகள்) .............................................................. 33 - 112

சமீபத்திய செய்திகள்

## ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–IV (தொகுதி–IV பணிகள்)

**பொது அறிவு (75 கேள்விகள்) திறனறிவும் மனக்கணக்கு நுண்ணறிவும் (25 கேள்விகள்) மற்றும் தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு (100 கேள்விகள்) அடங்கிய ஒரு தாள்**

### பகுதி - அ  தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு

**(பத்தாம் வகுப்புத் தரம் 100 கேள்விகள்)**

அலகு I: இலக்கணம் (25 கேள்விகள்)

அலகு II: சொல்லகராதி (15 கேள்விகள்)

அலகு III: எழுதும் திறன் (15 கேள்விகள்)

அலகு IV: கலைச் சொற்கள் (10 கேள்விகள்)

அலகு V: வாசித்தல் – புரிந்து கொள்ளும் திறன் (15 கேள்விகள்)

அலகு VI: எளிய மொழி பெயர்ப்பு (5 கேள்விகள்)

அலகு VII: இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும் (15 கேள்விகள்)

குறிப்பு அலகு VII–க்கான பாடத்திட்டம் பத்தாம் வகுப்பு வரையிலான ( SSLC Standard) பாடப் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டது.

### பகுதி - ஆ  பொது அறிவு (பத்தாம் வகுப்புத் தரம்)

அலகு I: பொது அறிவியல் (5 கேள்விகள்)

அலகு II: புவியியல் (5 கேள்விகள்)

அலகு III: இந்தியாவின் வரலாறு, பண்பாடு மற்றும் இந்திய தேசிய இயக்கம் (10 கேள்விகள்)

அலகு IV: இந்திய ஆட்சியியல் (15 கேள்விகள்)

அலகு V: இந்தியப் பொருளாதாரம் மற்றும் தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம் (20 கேள்விகள்)

அலகு VI: தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு மற்றும் சமூக – அரசியல் இயக்கங்கள் (20 கேள்விகள்)

### பகுதி - இ  திறனறிவும் மனக்கணக்கு நுண்ணறிவும் (பத்தாம் வகுப்புத் தரம் - 25 கேள்விகள்)

அலகு I: திறனறிவு (15 கேள்விகள்)

அலகு II: காரணவியல் (10 கேள்விகள்)

◆❖•❖◆

# TNPSC CCSE IV Group IV தேர்வு

கால அளவு : 3 மணி நேரம்
மதிப்பெண் : 300

## ஒரிஜினல் வினாத்தாள் 2025

தேர்வு நாள் : 12.07.2025

## பகுதி - அ (தமிழ் தகுதி & மதிப்பீட்டுத் தேர்வு)

**1. 'பாடும் பாடல்' என்ற சொற்கள் எந்த பெயரெச்ச வகையென்று கண்டறிக.**

**A.** நிகழ்காலப் பெயரெச்சம்
**B.** இறந்தகாலப் பெயரெச்சம்
**C.** எதிர்காலப் பெயரெச்சம்
**D.** குறிப்புப் பெயரெச்சம்

**விளக்கம் :** **விடை : C**

பாடிய பாடல் – இறந்தகாலப் பெயரெச்சம்
பாடுகின்ற பாடல் – நிகழ்காலப் பெயரெச்சம்
பாடும் பாடல் – எதிர்காலப் பெயரெச்சம்
நல்ல பாடல் – குறிப்புப் பெயரெச்சம்

**2. 'நட' என்னும் வேர்ச்சொல்லின் வழி உயர்திணை வினையாலணையும் பெயரைக் கண்டறிக.**

**A.** நடந்தது
**B.** நடப்பது
**C.** நடப்பவை
**D.** நடந்தவன்

**விளக்கம் :** **விடை : D**

ஒரு வினைமுற்றானது, வினையைக் குறிக்காமல் வினை செய்தவரைக் குறித்தால் அது வினையாலணையும் பெயர் ஆகும்.
**(எ.கா.)** அகழ்ந்தவர், வந்தவர், பொறுத்தவர், நடந்தவன்
மேற்கண்ட அனைத்தும் உயர்திணை வினையாலணையும் பெயர்கள் ஆகும்.
நடந்தது, நடப்பது, நடப்பவை ஆகியவை அஃறிணையைக் குறிக்கும் சொற்களாகும்.

**3. 'வை' என்னும் வேர்ச்சொல்லின் ஏவல் வினைமுற்றினைக் கண்டறிக.**

**A.** வைத்த
**B.** வைத்து
**C.** வைத்தது
**D.** வைத்தாள்

**விளக்கம் :** **விடை : ✶**

**கொடுக்கப்பட்டுள்ள வினா தவறானது.**
ஒரு சொல்லில் முதல் நிலையாக அமையும் பகுதியே வேர்ச்சொல் ஆகும். இது கட்டளைச் சொல்லாக ஏவல் வினைமுற்றாக வரும். **வை என்பதே வேர்ச்சொல்தான்.**
வை – வேர்ச்சொல்
வைத்தாள் – வினைமுற்று
வைத்த – பெயரெச்சம்
வைத்து – வினையெச்சம்
வைத்தது, வைத்தவர், வைத்தவள்; வைத்தவன் – வினையாலணையும் பெயர்
வைத்தல் – தொழிற்பெயர்

**4. குறில், நெடில் சொற்களுக்குச் சரியான பொருளைக் கண்டறிக.**

**கணம் – காணம்**

**A.** கூட்டம், பொன் **B.** பொன் , கூட்டம்
**C.** கூட்டம், காடு **D.** காடு, தோட்டம்

**விளக்கம் :** **விடை : A**

கணம் என்றால் கூட்டம் அல்லது திரட்சி என்பது பொருளாகும்.
காணம் என்ற சொல் கொள்ளு என்ற பயிறு வகை, நிறுத்தலளவையுள் ஒன்று, பொன், பொற்காசு, செக்கு போன்ற பல பொருள்களாக் குறிக்கும்.

**5. சரியான விடைக் குறிப்பைத் தேர்க.**

**கூற்று : 'தந்தப் பலகை' என்பதன் பொருள் 'கொடுத்த பலகை' என்பதாகும்.**

**காரணம் : இரண்டு சொற்களுக்கு இடையில் 'ப்' என்ற ஒற்றெழுத்து மிகுந்து வந்ததால், கொடுத்த பலகை என்னும் பொருளைக் குறிக்கிறது.**

**A.** கூற்று – சரி ; காரணம் – தவறு
**B.** கூற்று – தவறு ; காரணம் – சரி
**C.** கூற்று – சரி ; காரணம் – சரி
**D.** கூற்று – தவறு ; காரணம் – தவறு

**விளக்கம் :** **விடை : D**

'தந்த பலகை' என்றால் கொடுத்த பலகை என்பது பொருளாகும்.
தந்த பலகை என்பது இறந்தகால பெயரெச்சம் ஆகும். ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தைத் தவிர, மற்ற பெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது.
தந்தப் பலகை என வல்லினம் மிகுந்து வந்தால், அது தந்தத்தால் செய்த பலகை என்பது பொருளாகும்.

**6. பின்வருவனவற்றுள் சந்திப் பிழையற்ற சொற்றொடரைத் தேர்க.**

**A.** அங்குக் கேட்டேன் **B.** அங்கு கேட்டேன்
**C.** இங்கு பேசாதே **D.** எங்கு சென்றாய்

**விளக்கம் :** **விடை : A**

அங்கு, இங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, யாண்டு ஆகிய இடப்பெயர்களின் பின் வல்லினம் மிகும்.

அங்கு + கண்டேன் – அங்குக் கண்டேன்
அங்கு + கேட்டேன் – அங்குக் கேட்டேன்
எங்கு + பார்த்தாள் – எங்குப் பார்த்தாள் ?
ஆங்கு + தேடினர் – ஆங்குத் தேடினர்
ஈங்கு + கூடினர் – ஈங்குக் கூடினர்
யாண்டு + சென்றது – யாண்டுச் சென்றது ?

**7. இரு பொருள் தருக : தாரணி**

**A.** சூரியன், உலகம் **B.** கதிரவன், மதி
**C.** கடல், பூமி **D.** பூமி, உலகம்

**விளக்கம் :** **விடை : D**

தாரணி என்ற சொல்லுக்கு பூமி, உலகம், மலை, மலர் மாலை போன்ற பல பொருள்கள் உள்ளன.

**8. ஒருபொருட்பன்மொழியில் 'மீமிசை ஞாயிறு' என்னும் சொற்கள் உணர்த்தும் பொருளைக் கண்டறிக.**

**A.** பக்கப்பகுதி **B.** கீழ்ப்பகுதி
**C.** நடுப்பகுதி **D.** மேல்பகுதி

**விளக்கம் :** **விடை : D**

ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்ந்து அமைந்திருப்பது ஒருபொருட்பன்மொழி எனப்படும்.
**(எ.கா.)** திருமால் குன்றம் **உயர்ந்தோங்கி** நிற்கிறது.
அந்தக் குழந்தையின் கண்கள் **குழிதாழ்ந்து** காணப்படுகின்றன.
நடுமையம், மீமிசை ஞாயிறு ஆகிய சொற்களில் **நடுப்பகுதி** என்னும் ஒரே பொருளை உணர்த்தும் நடு, மையம் என்னும் இரு சொற்களும், **மேற்பகுதி** என்னும் பொருளைத் தரும் மீ, மிசை என்னும் இரு சொற்களும் இணைந்து வந்து ஒரே பொருளை உணர்த்துகின்றன.

SURA'S

9. **பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல்,**

**முரல், வகுலி, வாளை, வியாளம்**

**A.** முரல் **B.** வகுலி

**C.** வாளை **D.** வியாளம்

**விளக்கம் :** **விடை : D**

முரல், வகுலி, வாளை ஆகியவை மீன் வகைகள் ஆகும். வியாளம் என்றால் பாம்பு, புலி ஆகியவற்றைக் குறிக்கும் சொல் ஆகும்.

10. **பொருத்துக.**

**a.** சாந்து **1.** இழிதல்

**b.** குருவி **2.** குடை

**c.** சுனை **3.** ஒப்பு

**d.** அருவி **4.** அரை

**குறியீடுகள்:**

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A.** | 4 | 3 | 2 | 1 |
| **B.** | 4 | 1 | 2 | 3 |
| **C.** | 2 | 4 | 1 | 3 |
| **D.** | 4 | 2 | 1 | 3 |

**விளக்கம் :** **விடை : A**

◆ **சிலப்பதிகாரம் – மதுரைக் காண்டம் – புறஞ்சேரி இறுத்த காதை**

**காழ், அகில், சாந்தம், கமழ்பூங் குங்குமம்,**
**நாவிக் குழம்பு, நலம்கொள் தேய்வை – இளங்கோவடிகள்**

சாந்தம் அல்லது சாந்து என்பது சந்தனத்தைக் குறிக்கும் சொல், சந்தனம் என்பது அரைக்கப்படும் அல்லது தேய்க்கப்படும் ஒரு பொருளாகும்.

◆ **சிலப்பதிகாரம் – வஞ்சிக் காண்டம் – குன்றக் குரவை**

**"குருவி ஒப்பியும் கிளி கடிந்தும்**
**குன்றத்துச் சென்று வைகி,**
**அருவி ஆடியும் சுனை குடைந்தும்**
**அவவுற்று வருவேம்முன், – இளங்கோவடிகள்**

**பொருள் :** தினைப்புனங்களிலே வந்து படிகின்ற குருவிகளை ஓட்டியும், கிளிகளைத் துரத்தியும், மலையிடத்திலே செயல்புரிந்துவிட்டு, அருவி நீராடியும், சுனை நீரிலே குடைந்தும் வருகின்றோம்.

◆ **சிலப்பதிகாரம் – வஞ்சிக் காண்டம் – குன்றக் குரவை**

**இந்திர வில்லின் எழில்கொண்டு, இழுமென்று**
**வந்தீங்கு இழியும் மலையருவி ஆடுதுமே – இளங்கோவடிகள்**

**பொருள் :** இந்திரவில் போன்ற அழகினையும் தன்னுட் கொண்டதாக, இழும் என்ற ஒலியோடு வீழ்ந்து இங்கே காணப்படும் மலை அருவியிலே நீராடலாம். வாராய் !

11. **ஒலி மரபைக் கண்டறிக.**

**புள்**

**A.** நரலும் **B.** கருவும்

**C.** சிமிழ்க்கும் **D.** சீறும்

**விளக்கம் :** **விடை : A**

நரலும் என்ற ஒலிமரபு பறவைகளின் ஒலி மரபுச் சொல் ஆகும். புள் என்றால் பறவையினம் ஆகும். ஒவ்வொரு பறவை இனத்திற்கும் ஒரு குறிப்பிட்ட ஒலிமரபு உள்ளது. எடுத்துக்காட்டாக காகம் கரையும், சேவல் கூவும், ஆந்தை அலறும், குயில் கூவும், புறா குனுகும்,, மயில் அகவும், வாத்து கத்தும், கூகை குழறும் போன்றவற்றைக் கூறலாம். இங்கு புள் என்று பொதுவான பெயர் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. எனவே பறவைகளின் பொது ஒலி மரபுச் சொல்லான நரலும் என்பது சரியான விடை ஆகும்.

### அகநானூறு – 13

**வெண்குருகு நரல வீசும்**
**நுண்பல் துவலைய தண்பனி நாளே**
**– பெருந்தலைச் சாத்தனார்**

நரலும் – கொக்குகள் எழுப்பும் ஒலியைக் குறிக்கிறது.

**குறிப்பு :**

**TNPSC விடைக் குறிப்பில் 'சிமிழ்க்கும்' என்பது விடையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அது தவறாகும். சிமிழ்க்கும் என்றால் கட்டுவது அல்லது பிணிப்பது என்று பொருளாகும்.**

எ.கா: **தவம் மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து வேட்டுவன் புள்சிமிழ்த்து அற்று.**

**பிரிவு :** அறத்துப்பால்

**இயல் :** துறவறவியல்

**அதிகாரம் :** கூடாவொழுக்கம் (28)

**குறள் எண் :** 274

**பொருள் :** தவக்கோலத்தில் மறைந்து கொண்டு தகாத செயல்களைச் செய்வது, புதரில் மறைந்து கொண்டு வேடன் பறவைகளைப் வலைவீசிப் பிடிப்பது போலாகும்.

**அருஞ்சொற்பொருள் :**

தவம் மறைந்து – தவவேடம்
அல்லவை – நன்மை அல்லாத செயல்கள்
புதல் – புதர்
மறைந்து – ஒளிந்து
வேட்டுவன் – வேடன்
புள் – பறவை
சிமிழ்த்து – பிணித்து, கட்டுவது
புள் சிமிழ்த்து – பறவைகளை வலையில் பிணித்தல்
அற்று – அத்தன்மையது

திருக்குறளுக்கு உரை எழுதிய பழைய உரையாசிரியர்களுள் ஒருவரான **பரிதி** என்பவர் புள்சிமிழ்த்து என்பதற்கு **பறவையை வதைத்தல் (கொடுமை செய்தல்)** என்று உரை எழுதியுள்ளார். பழைய உரையாசிரியர்களுள் மற்றொருவரான, **காலிங்கர்** என்பவர் வலையை விரித்து வைத்த வேடன், புதர்களின் பின்னே மறைந்து நின்று பறவைகளை வரவழைக்க, வாயின் மேல் விரல் வைத்து வினோதமான ஒலியை எழுப்புவதைப் போல என்று விளக்கம் அளித்துள்ளார். பெரும்பாலான உரையாசிரியர்கள் சிமிழ்த்தல் என்பதற்குப் **பிணித்தல்** என்றே எழுதியுள்ளனர்.

12. **பிறவினைத் தொடரைக் கண்டறிக.**

**A.** அன்பு பாடல் பாடினாள்

**B.** கவின்மொழி திருக்குறள் கற்றாள்

**C.** அடிகள் மறை ஓதினர்

**D.** அரசன் மாலை அணிவித்தான்

**விளக்கம் :** **விடை : D**

வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும். **அரசன் மாலை அணிந்தான்** என்பது தன்வினை ஆகும்.

வினையின் பயன் எழுவாயை அன்றிப் பிறிதொன்றைச் சேருமாயின் அது பிறவினை ஆகும். **அரசன் மாலை அணிவித்தான்** என்பது பிறவினை ஆகும்.

13. **எவ்வகை வினை என்பதைக் கண்டறிக.**

**இரண்டாம் வேற்றுமையில் இருப்பது முதல் வேற்றுமையாகவும், முதல் வேற்றுமையில் இருப்பது மூன்றாம் வேற்றுமையாகவும் மாறும் வினை எப்போது நிகழும் ?**

**A.** செய்வினை செயப்பாட்டுவினையாக மாறும்போது

**B.** செயப்பாட்டுவினை செய்வினையாக மாறும்போது

**C.** தன்வினை பிறவினையாக மாறும்போது

**D.** பிறவினை தன்வினையாக மாறும்போது

**விளக்கம் :** **விடை : A**

1. செய்வினைகளோடு **ஆயிற்று, போயிற்று** என்ற துணைவினைகள் சேர்ந்து செயப்பாட்டு வினைகளை உருவாக்கும்.
   **(எ.கா.)** வேலை வந்தாயிற்று, வீடு கட்டியாயிற்று.
2. செய்வினைப் பகுதியோடு **உண், படு** முதலான துணைவினைகள் சேர்ந்து செயப்பாட்டு வினைகளை உருவாக்கும்.
   **(எ.கா)** கொலையுண்டான், வதைபட்டான்.

**விளக்கம் :** **விடை : (B)**

0, 2, 24, 252, 3120, _______

$0 \Rightarrow 1^1 - 1 = 0$

$2 \Rightarrow 2^2 - 2 = 4 - 2 = 2$

$24 \Rightarrow 3^3 - 3 = 27 - 3 = 24$

$252 \Rightarrow 4^4 - 4 = 256 - 4 = 252$

$3120 \Rightarrow 5^5 - 5 = 3125 - 5 = 3120$

$6^6 - 6 = 46656 - 6 = \boxed{46650}$

கொடுக்கப்பட்டுள்ள தொடர் வரிசையில் வரும் அடுத்த உறுப்பு 46650 ஆகும்.

**18. இந்த தொடர்ச்சி எண்களில்**

**6 4 1 2 2 8 7 4 2 1 5 3 8**

**இரண்டு வித்தியாசத்தை உடைய எண்களில் எத்தனை இணைகள் உள்ளன ?**

**A)** ஒன்று **B)** இரண்டு

**C)** மூன்று **D)** நான்கு

**விளக்கம் :** **விடை : (C)**

கொடுக்கப்பட்ட தொடர் 6 4 1 2 2 8 7 4 2 1 5 3 8

அடுத்தடுத்த எண்களின் வித்தியாசம்

$(6, 4) \Rightarrow 6 - 4 = \textcircled{2}$ $(7, 4) \Rightarrow 7 - 4 = 3$

$(4, 1) \Rightarrow 4 - 1 = 3$ $(4, 2) \Rightarrow 4 - 2 = \textcircled{2}$

$(1, 2) \Rightarrow 1 - 2 = -1$ $(2, 1) \Rightarrow 2 - 1 = 1$

$(2, 2) \Rightarrow 2 - 2 = 0$ $(1, 5) \Rightarrow 1 - 5 = 4$

$(2, 8) \Rightarrow 2 - 8 = -6$ $(5, 3) \Rightarrow 5 - 3 = \textcircled{2}$

$(8, 7) \Rightarrow 8 - 7 = 1$ $(3, 8) \Rightarrow 3 - 8 = -5$

வித்தியாசம் 2 உள்ள இணைகள் (6,4), (4,2) (5,3)

$\therefore$ 3 இணைகள் உள்ளன.

**19. D, F, G, H, I மற்றும் M ஆகியோர் வரிசையாக அமர்ந்துள்ளனர். I மற்றும் M ஆகியோர் மையத்திலும், F மற்றும் D ஆகியோர் முதலிலும், இறுதியாகவும் அமர்ந்துள்ளனர். G என்பவர் D–யின் இடதுபுறத்தில் அமர்ந்துள்ளார். அப்படியானால் F–ன் வலதுபுறத்தில் அமர்ந்திருப்பது யார் ?**

**A)** H **B)** I

**C)** M **D)** G

**விளக்கம் :** **விடை : (A)**

**கொடுக்கப்பட்ட தகவல்கள் :**

DFGHIM ஆகியோர் ஒரு வரிசையில் அமர்ந்துள்ளனர்

I மற்றும் M $\Rightarrow$ மையத்தில் அமர்ந்துள்ளனர்.

F மற்றும் D $\Rightarrow$ முதலிலும், இறுதியாகவும் அமர்ந்துள்ளனர்

G $\Rightarrow$ Dயின் இடதுபுறத்தில் அமர்ந்துள்ளார்.

**கொடுக்கப்பட்ட தகவல்களின் படி அமைந்துள்ள வரிசை :**

F $\boxed{\text{H}}$ I M G D

F–ன் வலதுபுறத்தில் H அமர்ந்திருக்கிறார்.

**20. A = 26, SUN = 27, எனில் CAT = ?**

**A)** 24 **B)** 27

**C)** 57 **D)** 58

**விளக்கம் :** **விடை : (C)**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M |
| ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ | ↕ |
| Z | Y | X | W | V | U | T | S | R | Q | P | O | N |
| 26 | 25 | 24 | 23 | 22 | 21 | 20 | 19 | 18 | 17 | 16 | 15 | 14 |

A ↓ Z = 26   S U N ↓ H F M   C A T ↓ X Z G

8 + 6 + 13 = 27   24 + 26 + 7 = 57

$\boxed{\therefore \text{CAT} = 57}$

**21. $a \neq b \neq c$ எனக் கொடுக்கப்பட்டிருந்தால் பின்வருவனவற்றுள் எது சரி ?**

**A)** $b \neq a \neq c$

**B)** a,b,c ஆகியவை வெவ்வேறானவை

**C)** $a = b = c$

**D)** $a \neq c$ அல்லது $a = c$

**விளக்கம் :** **விடை : (D)**

$a \neq b \neq c$ எனக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

$a \neq b$

$b \neq c$

$\therefore a \neq c$ அல்லது $a = c$ ஆக இருக்கலாம்.

**22. ஒரு பகடை 4 முறை உருட்டப்படும் போது அதன் 4 வேறுபட்ட நிலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**




**2–இன் எதிர் பக்கமாக இருக்கும் எண்ணைக் காண்க.**

**A)** 4 **B)** 5

**C)** 6 **D)** 3

**விளக்கம் :** **விடை : (A)**

2–இன் பக்க எண்கள் 3, 5, 1, 6 எனவே 2–இன் எதிரே உள்ள எண் 4 ஆகும்.

**23. தொடர் வரிசையில் உள்ள விடுபட்ட எண்ணைக் காண்க.**

**7, 12, 19, 24, 43, ............. 91.**

**A)** 50 **B)** 45

**C)** 48 **D)** 63

**விளக்கம் :** **விடை : (C)**

19 – 7=12   43 – 19 = 24   91 – 43 = 48

7 12 19 24 43 $\boxed{48}$ 91

12×2   24×2

$\therefore$ தொடர் வரிசையில் உள்ள விடுபட்ட எண் 48

**24. ஒருவர் தன்னுடைய நான்கு நண்பர்கள் A, B, C, மற்றும் D ஆகியவர்க்கு தனது பேனாக்களை $\frac{1}{3} : \frac{1}{4} : \frac{1}{5} : \frac{1}{6}$ ஆகிய**

**விகிதங்களில் விநியோகிக்கிறார் எனில் அவர் வைத்திருக்க வேண்டிய பேனாக்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை ............**

**A)** 23 **B)** 55

**C)** 57 **D)** 65

**விளக்கம் :** **விடை : (C)**

A : B : C : D

$\frac{1}{3} : \frac{1}{4} : \frac{1}{5} : \frac{1}{6}$

$A \Rightarrow \frac{1}{3} \times 60 = 20$

$B \Rightarrow \frac{1}{4} \times 60 = 15$

$C \Rightarrow \frac{1}{5} \times 60 = 12$

$D \Rightarrow \frac{1}{6} \times 60 = 10$

| | |
|---|---|
| 3 | 3, 4, 5, 6 |
| 2 | 1, 4, 5, 2 |
| | 1, 2, 5, 1 |

மீ.சி.ம = 60

A + B + C + D = 20 + 15 + 12 + 10 = 57

25. **2, 5, $x$, 20 ஆகிய எண்களை அதே வரிசையில் பயன்படுத்தி அமையும் விகிதங்கள் விகித சமமாக இருப்பின் '$x$'–ன் மதிப்பு.**

**A)** 50 **B)** 10

**C)** 8 **D)** 4

**விளக்கம் :** **விடை : (C)**

$2 : 5 :: x : 20$

$\frac{2}{5} = \frac{x}{20}$

$x = \frac{40}{5}$

$\boxed{x = 8}$

# தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு

## அலகு 1 இலக்கணம்

**பகுதி 1. எழுத்து**

பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல், சந்திப்பிழை, குறில்–நெடில் வேறுபாடு, ஒலி வேறுபாடுகள் (மயங்கொலிகள்) – ணகர, னகர வேறுபாடு, ரகர, றகர வேறுபாடுகள், லகர, ழகர, ளகர வேறுபாடுகள், இன எழுத்துகள் , சுட்டெழுத்துகள், வினா எழுத்துகள் அறிதல்,

**பகுதி 2. சொல்**

வேர்ச்சொல் அறிதல் – வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற்பெயர் அறிதல், அயற்சொல் – தமிழ்ச்சொல், எதிர்ச்சொல், வினைச்சொல், எழுத்துப்பிழை நீக்குதல்.

## அலகு 2 சொல்லகராதி

ஓரெழுத்து ஒரு மொழி, ஒரு சொல் – பல பொருள்கள் மற்றும் பல சொற்கள் – ஒரு பொருள், பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல், அகரவரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல், பேச்சு வழக்கு – எழுத்து வழக்கு, வட்டார வழக்குச் சொற்கள், சொல்லும் பொருளும் அறிதல், கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல்.

## அலகு 3 எழுதும் திறன்

சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல், எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் – செய்தி, கட்டளை, வினா, உணர்ச்சி வாக்கியங்கள் ; தனி, தொடர், கலவை வாக்கியங்கள் ; உடன்பாடு, எதிர்மறை, செய்வினை, செயப்பாட்டுவினை , தன்வினை, பிறவினை வாக்கியங்கள், நேர்க்கூற்று, அயற்கூற்று வாக்கியங்கள், ஒருமைப் பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல், வாக்கியத்தில் உண்டாகும் பிழைகளும் நீக்கங்களும் , மரபுத்தமிழ் – வழு, வழா, வழுவமைதி நிலைகள், வினா வகைகள், விடை வகைகள், மரபுப் பெயர்கள் – ஒலிமரபு, இளமைப் பெயர்கள், வாழிடங்கள், தொகுப்பிடங்கள், பொருள்களின் தொகுப்பு, வினை மரபு. நிறுத்தற்குறியீடுகள்.

## அலகு 4 கலைச்சொற்கள்

மொழி, இயற்கை (புவியியல் / நிலவியல்) , அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், கல்வி மற்றும் தொழில்நுட்பம், நாகரிகம் மற்றும் பண்பாடு, நாடு மற்றும் சமூகம், அறம், தத்துவம், சிந்தனை, மனிதம் மற்றும் ஆளுமை, கலை மற்றும் அழகியல், மருத்துவம், நூலகம், தொடர்வண்டி நிலையம், உணவகம், வானூர்தி நிலையம், நீதிமன்றம், திரைத்துறை, வங்கி, அலுவலகப் பொருள்கள், இதர கலைச்சொற்கள், பரிதிமாற் கலைஞரின் சொல்லாக்கம், சட்டங்கள், திரைப்படக் கலை, பட்டங்கள், இதழியல்.

## அலகு 5 வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன்

பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல், உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல் – உவமைகளும் விளக்கங்களும், பழமொழிகள் பொருளறிதல் – பழமொழிகளும் விளக்கங்களும், மரபுத்தொடரின் பொருளறிதல்.

## அலகு 6 எளிய மொழிபெயர்ப்பு

கவிதையியல், நாடகவியல், தொடரியல், மொழி பெயர்ப்புக்கலை, ஊடகவியல், இலக்கியவியல், , அரங்கவியல், திறனாய்வு அணுகுமுறைகள், இலக்கணவியல், மின்னணு ஊடகம், கணினியியல்,

## அலகு 7 இலக்கியம், தமிழறிஞர்களும் தமிழ்த்தொண்டும்

**இலக்கியம் :** திருக்குறள் தொடர்பான செய்திகள், ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, ஊக்கமுடைமை, விருந்தோம்பல், அறன் வலியுறுத்தல், ஈகை, பெரியாரைத் துணைக்கோடல், வினை செயல்வகை, அவையஞ்சாமை, கண்ணோட்டம், அன்புடைமை, கல்வி, நடுநிலைமை, கூடா ஒழுக்கம், கல்லாமை, செங்கோன்மை, பண்புடைமை, நட்பாராய்தல், புறங்கூறாமை, அருளுடைமை ஆகிய இருபது அதிகாரங்கள்.

**அற நூல்கள் தொடர்பான செய்திகள் :** பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், ஔவையார் பாடல்கள்.

**தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும் :** தமிழின் தொன்மை, சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள், தமிழ்ச் சான்றோர் பற்றிய செய்திகள், தமிழ்த் தொண்டாற்றிய அயல்நாட்டவர், அகரமுதலி வரலாறு, தமிழக மகளிரின் சிறப்புகள்.

**கூடுதல் தகவல்கள்**

# அலகு 1 - இலக்கணம்

## எழுத்து

## பிரித்து எழுதுதல்

### பிரித்து எழுதுதல்

ஓலைச்சுவடி – ஓலை + சுவடி
தமிழ்ப்பணி – தமிழ் + பணி
குறிஞ்சிப்பாட்டு – குறிஞ்சி + பாட்டு
தமக்குரியர் – தமக்கு + உரியர்
அன்பீனும் – அன்பு + ஈனும்
நிழலருமை – நிழல் + அருமை
வழக்கென்ப – வழக்கு + என்ப
புறத்துறுப்பு – புறம் + அத்து + உறுப்பு
தரமில்லை – தரம் + இல்லை
திருவருட்பா – திரு + அருள்+பா
என்பிலதனை – என்பு + இலதனை
வேறில்லை – வேறு + இல்லை
தொழிலனைத்தும் – தொழில் + அனைத்தும்
இரண்டொழிய – இரண்டு + ஒழிய
இரும்பாணிகள் – இரும்பு + ஆணிகள்
கொல்லருலை – கொல்லர் + உலை
தமிழழகு – தமிழ் + அழகு
மலரடி – மலர் + அடி
தேனருவி – தேன் + அருவி
யாதொன்றும் – யாது + ஒன்றும்
பயக்குமெனின் – பயக்கும் + எனின்
புறநானூறு – புறம் + நான்கு + நூறு
மக்கட்கெல்லாம் – மக்கள் + எல்லாம்
பிணியின்மை – பிணி + இன்மை
குலனுடைமை – குலன் + உடைமை
பூங்கோயில் – பூ+ கோயில்
புடைத்தென்னார் – புடைத்து + என்னார்
என்றுருகுவார் – என்று + உருகுவார்
அழுக்கில்லா – அழுக்கு + இல்லா
அறிவுண்டாம் – அறிவு + உண்டாம்
அணிவதாலல்லவோ – அணிவதால் + அல்லவோ
செவ்விதழ் – செம்மை + இதழ்
உடற்குண்டாம் – உடற்கு + உண்டாம்
விலையில்லா – விலை + இல்லா
நேரிங்கே – நேர் + இங்கே
சேமமுற – சேமம் + உற
தேசமெல்லாம் – தேசம் + எல்லாம்
பருவப்பெண் – பருவம் + பெண்
கலம்பகம் – கலம் + பகம்
நெற்கதிர் – நெல் + கதிர்
நிலவுமுண்டோ – நிலவும் + உண்டோ
மண்ணுண்டோ – மண் + உண்டோ
நின்னடி – நின் + அடி
கசடற – கசடு + அற
எழுத்தென்ப – எழுத்து + என்ப
மணற்கேணி – மணல் + கேணி
கற்றறிந்தார் – கற்று + அறிந்தார்
பசும்பொற்சுடர் – பசுமை + பொன் + சுடர்
கண்ணிறைந்த – கண் + நிறைந்த
செயற்கரிய – செயல் + கு + அரிய
பொருட்டன்று – பொருட்டு + அன்று
ஆறுய்த்து – ஆறு + உய்த்து
நட்பன்று – நட்பு + அன்று
செந்தமிழ் – செம்மை + தமிழ்
பேச்சுக்கலை – பேச்சு + கலை
புத்துயிரூட்டி – புதுமை + உயிர் + ஊட்டி
சதுரகராதி – சதுர் + அகராதி
பிணியின்றி – பிணி + இன்றி
அவையஞ்சான் – அவை + அஞ்சான்
மாண்புடையார் – மாண்பு + உடையார்
வேண்டியதில்லை – வேண்டியது + இல்லை
புகழெனக்கு – புகழ் + எனக்கு
குவையெனக்கு – குவை + எனக்கு
தமிழ்ப்பசி – தமிழ் + பசி
செய்தித்தாள் – செய்தி + தாள்
ஓரிடம் – ஓர் + இடம்
தொண்ணூற்றாறு – தொண்ணூறு + ஆறு
தினையளவு – தினை + அளவு
பனையளவு – பனை + அளவு
பசுந்தலை – பசுமை + தலை
மாசிலா – மாசு + இலா
ஈரிருவர் – இரு+ இருவர்
பைங்குவளை – பசுமை + குவளை
செந்தாமரை – செம்மை + தாமரை
இருபதாண்டு – இருபது + ஆண்டு
மின்னணுவியல் – மின் + அணு + இயல்
உள்ளங்கை – உள்ளம் + கை
மேம்பாடைய – மேம்பாடு + அடைய
மின்னஞ்சல் – மின் + அஞ்சல்
மலர்க்கரம் – மலர் + கரம்
குவியுமென்று – குவியும் + என்று
செங்கதிரவன் – செம்மை + கதிரவன்
தாய்மையன்பு – தாய்மை + அன்பு
ஐயாயிரம் – ஐந்து + ஆயிரம்
வேடமணிந்த – வேடம் + அணிந்த
சிறையிலடைத்த – சிறையில் + அடைத்த
தென்னாடு – தெற்கு + நாடு
மெய்ஞ்ஞானம் – மெய் + ஞானம்
உடம்பார் – உடம்பு + ஆர்
ஒன்றுற – ஒன்று + உற
கோலமிட்டு – கோலம் + இட்டு
கதையழகு – கதை + அழகு
ஏட்டிலக்கியம் – ஏடு + இலக்கியம்
நாடகக்கலை – நாடகம் + கலை
நூற்றாண்டு – நூறு + ஆண்டு
தேசியப்பாடல் – தேசியம் + பாடல்
நாடகம் – நாடு + அகம்
சண்பகக்காடு – சண்பகம் + காடு
போதவிழ் – போது + அவிழ்
வளந்தொறும் – வனம் + தொறும்
உயிரென – உயிர் + என
அருந்திறல் – அருமை + திறல்
ஒற்றைக்கால் – ஒற்றை + கால்
காட்டுயிரிகள் – காடு + உயிரிகள்
சிற்றாறு – சிறுமை + ஆறு
புகலிடம் – புகல் + இடம்
விலங்கினம் – விலங்கு + இனம்
ஐம்பூதங்கள் – ஐந்து + பூதங்கள்
வாழிடம் – வாழ் + இடம்
எளிதென்ப – எளிது + என்ப
பண்புடைமை – பண்பு + உடைமை
மக்களொப்பு – மக்கள் + ஒப்பு
பயனுடையார் – பயன் + உடையார்
பண்புடையார் – பண்பு + உடையார்
திருவருட்பா – திரு + அருள் + பா
கண்டபோதெல்லாம் – கண்டபோது + எல்லாம்
பசியறாது – பசி + அறாது
வீடுதோறிரந்தும் – வீடுதோறும் + இரந்தும்
கண்டுளம் – கண்டு + உளம்
வானியல் – வான் + இயல்
வானூர்தி – வான் + ஊர்தி
பழந்தமிழர் – பழைமை + தமிழர்
(சமச்சீர்க் கல்வியில் பழமை + தமிழர் எனக் கொடுக்கப்பட்டுள்ளது.)
திருவுளம் – திரு + உளம்
திருப்புயம் – திரு + புயம்
பெருந்தவம் – பெருமை + தவம்

SURA'S

| | |
|---|---|
| தலைவனென | – தலைவன் + என |
| அரும்பணி | – அருமை + பணி |
| செந்தமிழ்ச்செல்வி | – செம்மை + தமிழ் + செல்வி |
| தமிழன்னை | – தமிழ் + அன்னை |
| தனித்தமிழ் | – தனி + தமிழ் |
| நன்றியுணர்வு | – நன்றி + உணர்வு |
| அமுதகிரணம் | – அமுதம் + கிரணம் |
| பிள்ளைத்தமிழ் | – பிள்ளை + தமிழ் |
| நகைச்சுவை | – நகை + சுவை |
| மண்ணுலகம் | – மண் + உலகம் |
| உள்ளொதுங்கி | – உள் + ஒதுங்கி |
| புத்துணர்ச்சி | – புதுமை + உணர்ச்சி |
| சிற்றிலக்கியம் | – சிறுமை + இலக்கியம் |
| செவிக்குணவு | – செவிக்கு + உணவு |
| சுவையுணரா | – சுவை + உணரா |
| வாயுணர்வு | – வாய் + உணர்வு |
| தந்துய்ம்மின் | – தந்து + உய்ம்மின் |
| வில்லெழுதி | – வில் + எழுதி |
| பூட்டுமின் | – பூட்டு + மின் |
| மருப்பூசி | – மருப்பு + ஊசி |
| மார்போலை | – மார்பு + ஓலை |
| எமதென்று | – எமது + என்று |
| மொய்யிலை | – மொய் + இலை |
| வாயினீர் | – வாயின் + நீர் |
| வெந்துலர்ந்து | – வெந்து + உலர்ந்து |
| காடிதனை | – காடு + இதனை |
| கருமுகில் | – கருமை + முகில் |
| எழுந்தெதிர் | – எழுந்து + எதிர் |
| அறிவுண்டாக | – அறிவு + உண்டாக |
| நாத்தொலைவில்லை | – நா + தொலைவு + இல்லை |
| பிணிநோயுற்றோர் | – பிணி + நோய் + உற்றோர் |
| இயல்பீராறு | – இயல்பு + ஈர் (இரண்டு) + ஆறு |
| நன்மொழி | – நன்மை + மொழி |
| எனக்கிடர் | – எனக்கு + இடர் |
| தொழுதேத்தி | – தொழுது + ஏத்தி |
| உண்டென்று | – உண்டு + என்று |
| நல்லறம் | – நன்மை + அறம் |
| ஒருவற்கு | – ஒருவன் + கு |
| இளிவன்று | – இளிவு + அன்று |
| சால்பென்னும் | – சால்பு + என்னும் |
| கடற்கரை | – கடல் + கரை |
| நாட்டுப்பண் | – நாடு + பண் |
| ஆற்றுமணல் | – ஆறு + மணல் |
| செப்புபட்டயம் | – செம்பு + பட்டயம் |
| ஈண்டினியான் | – ஈண்டு + இனி + யான் |

| | |
|---|---|
| காண்டகு | – காண் + தகு |
| சேவடி | – செம்மை + அடி |
| வெவ்விருப்பாணி | – வெம்மை + இரும்பு + ஆணி |
| மற்றிரண்டு | – மற்று + இரண்டு |
| குருசேற்றி | – குருசு + ஏற்றி |
| தன்னரிய | – தன் + அரிய |
| தவிப்பெய்தி | – தவிப்பு + எய்தி |
| இத்தகைய | – இ + தகைய |
| மனநலம் | – மனம் + நலம் |
| இருப்புமுளை | – இரும்பு + முளை |
| ஈண்டிவரே | – ஈண்டு + இவரே |
| எடுத்துரைக்கும் | – எடுத்து + உரைக்கும் |
| பங்கிட்டார் | – பங்கு + இட்டார். |
| எழுத்திட்டார் | – எழுத்து + இட்டார் |
| என்றாகடியமான | – என்று + ஆகடியம் + ஆன |
| ஆரளவு | – அருமை + அளவு |
| கருங்கோல் | – கருமை + கோல் |
| பெருந்தேன் | – பெருமை + தேன் |
| பரிந்தோம்பி | – பரிந்து + ஓம்பி |
| தெரிந்தோம்பி | – தெரிந்து + ஓம்பி |
| வழியொழிகி | – வழி + ஒழுகி |
| எள்ளறு | – எள் + அறு |
| புள்ளறு | – புள்+ அறு |
| அரும்பெறல் | – அருமை + பெறல் |
| பெரும்பெயர் | – பெருமை + பெயர் |
| அவ்வூர் | – அ + ஊர் |
| பெருங்குடி | – பெருமை + குடி |
| புகுந்தீங்கு | – புகுந்து + ஈங்கு |
| பெண்ணணங்கு | – பெண் + அணங்கு |
| நற்றிறம் | – நன்மை + திறம் |
| காற்சிலம்பு | – கால் + சிலம்பு |
| செங்கோல் | – செம்மை + கோல் |
| வெளியுலகில் | – வெளி + உலகில் |
| செந்தமிழ் | – செம்மை + தமிழ் |
| ஊரறியும் | – ஊர் + அறியும் |
| எவ்விடம் | – எ + இடம் |
| அங்கண் | – அம் + கண் |
| பற்பல | – பல + பல |
| புன்கண் | – புன்மை + கண் |
| மென்கண் | – மென் + கண் |
| அருவிலை | – அருமை + விலை |
| நன்கலம் | – நன்மை + கலம் |
| செலவொழியா | – செலவு + ஒழியா |
| வழிக்கரை | – வழி + கரை |
| வந்தணைந்த | – வந்து + அணைந்த |
| எம்மருங்கும் | – எ + மருங்கும் |

| | |
|---|---|
| எங்குறைவீர் | – எங்கு + உறைவீர் |
| கண்ணருவி | – கண் + அருவி |
| உடம்பெல்லாம் | – உடம்பு + எல்லாம் |
| திருவமுது | – திரு + அமுது |
| மனந்தழைப்ப | – மனம் + தழைப்ப |
| நற்கறிகள் | – நன்மை + கறிகள் |
| இன்னமுது | – இனிமை + அமுது |
| வாளரா | – வாள் + அரா |
| அங்கை | – அகம் + கை |
| நான்மறை | – நான்கு + மறை |
| விதிர்ப்புற்றஞ்சி | – விதிர்ப்பு + உற்று + அஞ்சி |
| பாவிசை | – பா + இசை |
| நாற்கரணம் | – நான்கு + கரணம் |
| கரணத்தேர் | – கரணத்து + ஏர் |
| நாற்பொருள் | – நான்கு + பொருள் |
| செவியறுத்து | – செவி + அறுத்து |
| இளங்கனி | – இளமை + கனி |
| விண்ணப்பமுண்டு | – விண்ணப்பம் + உண்டு |
| பிணியறியோம் | – பிணி + அறியோம் |
| எந்நாளும் | – எ + நாளும் |
| நாமென்றும் | – நாம் + என்றும் |
| தெண்டிரை | – தெண்மை + திரை |
| பெருக்கெடுத்து | – பெருக்கு + எடுத்து |
| உள்ளுறை | – உள் + உறை |
| நெடுநீர் | – நெடுமை + நீர் |
| அல்வழி | – அ + வழி |
| இருவிழி | – இரண்டு + விழி |
| வெள்ளெயிறு | – வெண்மை + எயிறு |
| கரிக்கோடு | – கரி + கோடு |
| பெருங்கிரி | – பெருமை + கிரி |
| எண்கினங்கள் | – எண்கு + இனங்கள் |
| வீழ்ந்துடல் | – வீழ்ந்து + உடல் |
| மாதிரத்துறை | – மாதிரத்து + உறை |
| செங்கதிர் | – செம்மை + கதிர் |
| பெருவரி | – பெருமை + வரி |
| பெருஞ்சிரம் | – பெருமை + சிரம் |
| தண்டளிர்ப் பதம் | – தண்மை + தளிர் + பதம் |
| திண்டிறல் | – திண்மை + திறல் |
| சிரமுகம் | – சிரம் + முகம் |
| பணிந்தவர் | – பணிந்து + இவர் |
| அன்பெனப்படுவது | – அன்பு + எனப்படுவது |
| பண்பெனப்படுவது | – பண்பு + எனப்படுவது |
| பற்றில்லேன் | – பற்று + இல்லேன் |
| போன்றிருந்தேன் | – போன்று + இருந்தேன் |
| மகிழ்ச்சியடைந்தான் | – மகிழ்ச்சி + அடைந்தான் |
| ஒலியெழுப்பி | – ஒலி + எழுப்பி |
| படைத்தளபதி | – படை + தளபதி |

| | |
|---|---|
| பூலோகமெல்லாம் | – பூலோகம் + எல்லாம் |
| வைத்திருந்தனர் | – வைத்து + இருந்தனர் |
| வீதியெங்கும் | – வீதி + எங்கும் |
| புத்துணர்ச்சி | – புதுமை + உணர்ச்சி |
| தண்ணீர் | – தண்மை + நீர் |
| வெண்புகை | – வெண்மை + புகை |
| மரத்தூள் | – மரம் + தூள் |
| மழையாகுமே | – மழை + ஆகுமே |
| உலகூட்டும் | – உலகு + ஊட்டும் |
| அந்நாளும் | – அ + நாளும் |
| தொலைக்காட்சி | – தொலை + காட்சி |
| பிறப்பெடுத்தேன் | – பிறப்பு + எடுத்தேன் |
| மறந்துன்னை | – மறந்து + உன்னை |
| சிறப்படைந்தேன் | – சிறப்பு + அடைந்தேன் |
| கரையோரம் | – கரை + ஓரம் |
| அங்கெல்லாம் | – அங்கு + எல்லாம் |
| இரண்டெடுத்து | – இரண்டு + எடுத்து |
| பழச்சாறு | – பழம் + சாறு |
| பல்லாண்டு | – பல + ஆண்டு |
| செயலாக்கம் | – செயல் + ஆக்கம் |
| பெரும்படை | – பெருமை + படை |
| பெருவெள்ளம் | – பெருமை + வெள்ளம் |
| வியனுலகம் | – வியன் + உலகம் |
| நிறையுடைமை | – நிறை + உடைமை |
| நெடிதுயர்ந்து | – நெடிது + உயர்ந்து |
| அவ்வுருவம் | – அ + உருவம் |
| நினைவகம் | – நினைவு + அகம் |
| இன்னலம் | – இனிமை + நலம் |
| கனியிடை | – கனி + இடை |
| நற்றமிழ் | – நன்மை + தமிழ் |
| கருங்கடல் | – கருமை + கடல் |
| நானூறு | – நான்கு + நூறு |
| மற்போர் | – மல் + போர் |
| காலாட்படை | – கால் + ஆள் + படை |
| நிறைந்தறம் | – நிறைந்து + அறம் |
| அழைப்பிதழ் | – அழைப்பு + இதழ் |
| நன்றென்றல் | – நன்று + என்றல் |
| பொற்காசு | – பொன் + காசு |
| அமுதென்று | – அமுது + என்று |
| செம்பயிர் | – செம்மை + பயிர் |
| செந்தமிழ் | – செம்மை + தமிழ் |
| பொய்யகற்றும் | – பொய் + அகற்றும் |
| இடப்புறம் | – இடம் + புறம் |
| சீரிளமை | – சீர்மை + இளமை |
| வெண்குடை | – வெண்மை + குடை |
| பொற்கோட்டு | – பொன் + கோட்டு |
| நன்மாடங்கள் | – நன்மை + மாடங்கள் |
| நிலத்தினிடையே | – நிலத்தின் + இடையே |

| | |
|---|---|
| தட்பவெப்பம் | – தட்பம் + வெப்பம் |
| வேதியுரங்கள் | – வேதி + உரங்கள் |
| கண்டறி | – கண்டு + அறி |
| ஒப்வற | – ஒப்வு + அற |
| ஆழக்கடல் | – ஆழம் + கடல் |
| விண்வெளி | – விண் + வெளி |
| நின்றிருந்த | – நின்று + இருந்த |
| இடமெல்லாம் | – இடம் + எல்லாம் |
| மாசற | – மாசு + அற |
| கைப்பொருள் | – கை + பொருள் |
| குணமிருந்தால் | – குணம் + இருந்தால் |
| பசியின்றி | – பசி + இன்றி |
| படிப்பறிவு | – படிப்பு + அறிவு |
| நன்றியறிதல் | – நன்றி + அறிதல் |
| பொறையுடைமை | – பொறை + உடைமை |
| பாட்டிசைத்து | – பாட்டு + இசைந்து |
| கண்ணுறங்கு | – கண் + உறங்கு |
| போகிப்பண்டிகை | – போகி + பண்டிகை |
| பொருளுடைமை | – பொருள் + உடைமை |
| கல்லெடுத்து | – கல் + எடுத்து |
| நானிலம் | – நான்கு + நிலம் |
| கதிர்ச்சுடர் | – கதிர் + சுடர் |
| மூச்சடக்கி | – மூச்சு + அடக்கி |
| மின்னணு | – மின் + அணு |
| விரிவடைந்த | – விரிவு + அடைந்த |
| நூலாடை | – நூல் + ஆடை |
| தானென்று | – தான் + என்று |
| எளிதாகும் | – எளிது + ஆகும் |
| பாலையெல்லாம் | – பாலை + எல்லாம் |
| குரலாகும் | – குரல் + ஆகும். |
| இரண்டல்ல | – இரண்டு + அல்ல |
| தந்துதவும் | – தந்து + உதவும் |
| காடெல்லாம் | – காடு + எல்லாம் |
| பெயரறியா | – பெயர் + அறியா |
| மனமில்லை | – மனம் + இல்லை |
| காட்டாறு | – காடு + ஆறு |
| அனைத்துண்ணி | – அனைத்து + உண்ணி |
| யாதெனின் | – யாது + எனின் |
| யாண்டுளனோ | – யாண்டு + உளனோ |
| பூட்டுங்கதவுகள் | – பூட்டும் + கதவுகள் |
| தோரணமேடை | – தோரணம் + மேடை |
| ஏடெடுத்தேன் | – ஏடு + எடுத்தேன் |
| துயின்றிருந்தார் | – துயின்று + இருந்தார் |
| வாய்த்தீயின் | – வாய்த்து + ஈயின் |
| கேடில்லை | – கேடு + இல்லை |
| உயர்வடைவோம் | – உயர்வு + அடைவோம் |
| வனப்பில்லை | – வனப்பு + இல்லை |
| வண்கீரை | – வண்மை + கீரை |

| | |
|---|---|
| கோட்டோவியம் | – கோடு + ஓவியம் |
| செப்பேடு | – செப்பு + ஏடு |
| எழுத்தென்ப | – எழுத்து + என்ப |
| கரைந்துண்ணும் | – கரைந்து + உண்ணும் |
| நீருலையில் | – நீர் + உலையில் |
| தேர்ந்தெடுத்து | – தேர்ந்து + எடுத்து |
| ஞானச்சுடர் | – ஞானம் + சுடர் |
| இன்சொல் | – இனிமை + சொல் |
| நாடென்ப | – நாடு + என்ப |
| மலையளவு | – மலை + அளவு |
| தன்னாடு | – தன் + நாடு |
| தானொரு | – தான் + ஒரு |
| எதிரொலித்தது | – எதிர் + ஒலித்தது |
| என்றென்றும் | – என்று + என்றும் |
| வானமளந்தது | – வானம் + அளந்தது |
| இருதிணை | – இரண்டு + திணை |
| ஐம்பால் | – ஐந்து + பால் |
| நன்செய் | – நன்மை + செய் |
| நீளுழைப்பு | – நீள் + உழைப்பு |
| விழுந்ததங்கே | – விழுந்தது + அங்கே |
| செத்திறந்த | – செத்து + இறந்த |
| இன்னோசை | – இனிமை + ஓசை |
| வல்லுருவம் | – வன்மை + உருவம் |
| இவையுண்டார் | – இவை + உண்டார் |
| நலமெல்லாம் | – நலம் + எல்லாம் |
| கலனல்லால் | – கலன் + அல்லால் |
| கோயிலப்பா | – கோயில் + அப்பா |
| கனகச்சுனை | – கனகம் + சுனை |
| பாடறிந்து | – பாடு + அறிந்து |
| மட்டுமல்ல | – மட்டும் + அல்ல |
| கண்ணோடாது | – கண் + ஓடாது |
| கசடற | – கசடு + அற |
| அக்களத்து | – அ + களத்து |
| வாசலெல்லாம் | – வாசல் + எல்லாம் |
| பெற்றெடுத்தோம் | – பெற்று + எடுத்தோம் |
| வெங்கரி | – வெம்மை + கரி |
| என்றிருள் | – என்று + இருள் |
| சீவனில்லாமல் | – சீவன் + இல்லாமல் |
| விலங்கொடித்து | – விலங்கு + ஒடித்து |
| நமனில்லை | – நமன் + இல்லை |
| ஆனந்தவெள்ளம் | – ஆனந்தம் + வெள்ளம் |
| பெருஞ்செல்வம் | – பெருமை + செல்வம் |
| ஊராண்மை | – ஊர் + ஆண்மை |
| இன்பதுன்பம் | – இன்பம் + துன்பம் |
| விழித்தெழும் | – விழித்து + எழும் |
| போவதில்லை | – போவது + இல்லை |
| படுக்கையாகிறது. | – படுக்கை + ஆகிறது |
| எந்தமிழ்நா | – எம் + தமிழ் + நா |

SURA'S

# பிரித்து எழுதுதல்

## TNPSC கட்டாயத் தமிழ்மொழித் தேர்வில் கேட்கப்பட்ட கொள்குறி வினாக்கள் விளக்கமான விடைகளுடன்

**1. பூட்டுங்கதவுகள் – பிரித்தெழுதுக.**

A) பூட்டு + கதவுகள் B) பூட்டும் + கதவுகள்
C) பூட்டின் + கதவுகள் D) பூட்டிய + கதவுகள்

**விளக்கம் :** **விடை : B**

பூட்டும் + கதவுகள் – பூட்டுங்கதவுகள், இது மகரவீற்றுப் புணர்ச்சி ஆகும்.
'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்,
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்' என்ற விதிப்படி, நிலைமொழி ஈற்றிலுள்ள மகரமெய் ( ம்), வருமொழி முதலிலுள்ள வல்லினத்திற்கு (க) இனமான மெல்லினமாகத் (ங்) திரிந்து, பூட்டுங்கதவுகள் எனப் புணர்ந்தது.

**2. தொண்ணூற்றாறு – பிரித்து எழுதுக.**

A) தொண்ணூறு + ஆறு B) தொண் + ஆறு
C) தொள்ளாயிரம் + ஆறு D) தொள் + ஆறு

**விளக்கம் :** **விடை : A**

தொண்ணூறு + ஆறு. இது குற்றியலுகரப் புணர்ச்சி ஆகும்.
'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி,
தொண்ணூற் + ஆறு என்றானது.
'டகரம் ஊர்ந்து வரும் நெடில் தொடர்க் குற்றியலுகரம், றகரம் ஊர்ந்து வரும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆகியவை வருமொழியோடு புணரும் போது, அவை ஊர்ந்து வரும் ஒற்று இரட்டித்துப் புணரும்.'
தொண்ணூற் + ற் + ஆறு என்று ஒற்று இரட்டித்தது.
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி, தொண்ணூற்றாறு எனப் புணர்ந்தது.

**3. நாலாயிரம் – பிரித்தெழுக.**

A) நால் + ஆயிரம் B) நான்கு + ஆயிரம்
C) நான் + ஆயிரம் D) நாலு + ஆயிரம்

**விளக்கம் :** **விடை : B**

நாலாயிரம் – நான்கு + ஆயிரம்
எண்ணுப்பெயர் புணர்ச்சியில், நான்கென்னும் எண்ணின் ஈற்றுயிர் மெய்கெடும் விதிப்படி, நான் + ஆயிரம் என்றானது.
வருமொழியிலுள்ள னகரமானது, வருமொழி முதலில், உயிர் அல்லது இடையின எழுத்து வந்தால் லகரமாகத் திரியும் ; வல்லின எழுத்து வந்தால், றகரமாகத் திரியும் ; மெல்லின எழுத்து வந்தால், இயல்பாகத் திரியும்.
இங்கு வருமொழி முதலில் உயிர் வந்ததால், நாலாயிரம் எனப் புணர்ந்தது.

**4. பிரித்தெழுதுக : தானென்று**

A) தானெ + என்று B) தான் + என்று
C) தா + னென்று D) தான் + னென்று

**விளக்கம் :** **விடை : B**

தானென்று – தான் + என்று
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி தானென்று எனப் புணர்ந்தது.

**5. பிரித்தெழுதுக : வல்லுருவம்**

A) வல் + உருவம் B) வன்மை + உருவம்
C) வல்ல + உருவம் D) வல்லு + உருவம்

**விளக்கம் :** **விடை : B**

வல்லுருவம் – வன்மை + உருவம்
'ஈறு போதல்' விதிப்படி நிலைமொழியின் ஈற்றிலுள்ள மை விகுதி கெட்டு, வன்+ உருவம் என்றானது.
நிலைமொழி ஈற்றிலுள்ள, னகரம், லகரமாகத் திரிந்து, வல் + உருவம் என்றானது.
'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்ற விதிப்படி,
வல் + ல் + உருவம் என்றானது.
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி, வல்லுருவம் எனப் புணர்ந்தது.

**6. நானிலம் – பிரித்தெழுதுக.**

A) நா+னிலம் B) நான்கு + நிலம்
C) நா + நிலம் D) நான் + நிலம்

**விளக்கம் :** **விடை : B**

நானிலம் – நான்கு + நிலம்,
'நான்கென்னும் எண்ணின் ஈற்றுயிர் மெய்கெடும்' என்ற விதிப்படி, நான் + நிலம் என்றானது.
நிலைமொழியின் ஈற்றில் னகர ஒற்று வந்து வருமொழி முதலில் நகரம் வந்தால், அது னகரமாகத் திரியும் என்ற விதிப்படி நானிலம் எனப் புணர்ந்தது.

**7. நிலத்தினிடையே என்னும் சொல்லைப் பிரித்தெழுதுக.**

A) நிலம் + இடையே B) நிலத்தின் + இடையே
C) நிலத்து + இடையே D) நிலத் + இடையே

**விளக்கம் :** **விடை : B**

நிலத்தினிடையே – நிலத்தின் + இடையே
'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி, நிலத்தினிடையே எனப் புணர்ந்தது.

**8. இடம் + எங்கும் – பிரித்தெழுதுக.**

A) இடவெங்கும் B) இடம் எங்கும்
C) இடமெங்கும் D) இடம்மெங்கும்

**விளக்கம் :** **விடை : C**

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி இடமெங்கும் எனப் புணர்ந்தது.

**9. பொய்யகற்றும் – பிரித்தெழுதுக.**

A) பொய் + அகற்றும் B) பொய் + கற்றும்
C) பொய்ய + கற்றும் D) பொய் + யகற்றும்

**விளக்கம் :** **விடை : A**

'இ ஈ ஐவழி யவ்வும், ஏனை உயிர்வழி வவ்வும்' என்ற உடம்படுமெய் புணர்ச்சி விதிப்படி, பொய் + ய் + அகற்றும் என்றானது.
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி,
பொய் + யகற்றும் என ஆனது. பின் பொய்யகற்றும் என்று புணர்ந்தது.

**10. நலமெல்லாம் – பிரித்தெழுதுக.**

A) நலம் + எல்லாம் B) நலன் + எல்லாம்
C) நலம் + எலாம் D) நலன் + எலாம்

**விளக்கம் :** **விடை : A**

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி, நலமெல்லாம் எனப் புணர்ந்தது.

**11. செழுங்கனித் தீஞ்சுவை – பிரித்தெழுதுக.**

A) செழுமை + கனி +தீஞ்சுவை
B) செழும் + கனி + தீஞ்சுவை
C) செழும் + கனி + தீம் + சுவை
D) செழுமை + கனி + தீம் + சுவை

**விளக்கம் :** **விடை : D**

செழுமை + கனி + தீம் + சுவை
செழுமை + கனி . இது பண்புப்பெயர் புணர்ச்சி.
'ஈறுபோதல்' விதிப்படி மை விகுதி கெட்டு, செழு + கனி என்றானது.
'இனம் மிகல்' விதிப்படி வருமொழியின் முதல் எழுத்திற்கு இனமான 'ங்' தோன்றி செழுங்கனி எனப் புணர்ந்தது.

SURA'S

தீம் + சுவை. இது மெய்யீற்றுப் புணர்ச்சி.
'முன்னின்ற மெய்திரிதல்' என்ற விதிப்படி, வருமொழி முதலில் உள்ள வல்லினத்திற்கு இனமான 'ஞ்' தோன்றி தீஞ்சுவை எனப் புணர்ந்தது.

**12. நெடுநாவாய் – பிரித்தெழுதுக.**

A) நெடு + நாவாய் B) நெடுமை + நா + வாய்
C) நெடுமை + நாவாய் D) நெடுநா + வாய்

**விளக்கம் :** **விடை : C**

'ஈறுபோதல்' விதிப்படி மை விகுதி கெட்டு, நெடு + நாவாய் என்றானது. பின் இயல்பாகப் புணர்ந்து நெடுநாவாய் என்றானது.

**13. செங்கடல் – பிரித்தெழுதுக.**

A) செம்மை + கடல் B) செம் + கடல்
C) செங் + கடல் D) செழுமை + கடல்

**விளக்கம் :** **விடை : A**

செங்கடல் – செம்மை + கடல்
'ஈறுபோதல்' விதிப்படி, செம் + கடல் என்றானது.
நிலைமொழியீற்றின் மகரம் கெட்டு செ + கடல் என்றானது.
'இனம் மிகல்' விதிப்படி 'ங்' தோன்றி செங்கடல் எனப் புணர்ந்தது.

**14. நெடுங்கடல் – பிரித்தெழுதுக.**

A) நெடு + கடல் B) நெடுங் + கடல்
C) நெடுமை + கடல் D) நெடிய + கடல்

**விளக்கம் :** **விடை : C**

நெடுங்கடல் – நெடுமை + கடல்
'ஈறுபோதல்' விதிப்படி மை விகுதி கெட்டு நெடு + கடல் என்றானது.
'இனம் மிகல்' விதிப்படி நெடுங்கடல் என்றானது.

**15. கரியன் – பிரித்தெழுதுக.**

A) கரு + அன் B) கருமை + அன்
C) கரிய + அன் D) கரி + அன்

**விளக்கம் :** **விடை : B**

கருமை + அன் – கரியன்
'ஈறுபோதல்' விதிப்படி மை விகுதி கெட்டு கரு + அன் என்றானது.
'இடையுகரம் இய்யாதல்' என்ற விதிப்படி கரி + அன் என்றானது.
யகர உடம்படுமெய் பெற்று, கரி + ய் + அன் என்றானது.
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி கரியன் எனப் புணர்ந்தது.

**16. பரித்தியாகம் – பிரித்தெழுதுக.**

A) பரித்து + யாகம் B) பரித்தி + யாகம்
C) பரி + தியாகம் D) பரிதி + யாகம்

**விளக்கம் :** **விடை : C**

பரி + தியாகம் – பரித்தியாகம்
'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்ற விதிப்படி, நிலைமொழியின் ஈற்றிலுள்ள ரி – (ர் + இ) இ என்ற உயிரெழுத்து எவ்வித விகாரமும் இன்றி இயல்பாய் நிற்கிறது. எனவே பரி +த் + தியாகம் என்றாகி, பரித்தியாகம் எனப் புணர்ந்தது.

**17. தவறாகப் பிரிக்கப்பட்டுள்ள சொல்லைத் தேர்க.**

A) வெண்மதி – வெண் + மதி
B) வெந்துவர்ந்து – வெந்து + உவர்ந்து
C) காடிதனை – காடு + இதனை
D) கருமுகில் – கருமை + முகில்

**விளக்கம் :** **விடை : A**

வெண்மதி – வெண்மை + மதி
'ஈறுபோதல்' விதிப்படி மை விகுதி கெட்டு, வெண் + மதி என்றானது. பின்னர் வெண்மதி எனப் புணர்ந்தது.

**18. பொருட்டன்று – பிரித்தெழுதுக**

A) பொருட் + அன்று B) பொரு + அன்று
C) பொருட்டு + அன்று D) பொருட் + டன்று

**விளக்கம் :** **விடை : C**

பொருட்டு + அன்று – பொருட்டன்று
'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி,
பொருட்ட் + அன்று என்றானது.
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி பொருட்டன்று எனப் புணர்ந்தது.

**19. நாத்தொலைவில்லை – பிரித்தெழுதுக.**

A) நா+ தொலைவில்லை B) நாத்தொலைவு + இல்லை
C) நா + தொலை + இல்லை D) நா + தொலைவு + இல்லை

**விளக்கம் :** **விடை : D**

நா + தொலைவு + இல்லை.
'முற்றும் அற்று ஒரோவழி' என்ற விதிப்படி, வருமொழி முதலில் 'இ' என்ற உயிரெழுத்து வந்தால், நிலைமொழியிலுள்ள முற்றுகரமான 'உ' கெட்டு, தொலைவ் + இல்லை என்றானது.
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி, தொலைவில்லை எனப் புணர்ந்தது.
தோன்றல் விகாரப் புணர்ச்சி விதியின்படி, வல்லினம் மிகுந்து, நாத்தொலைவில்லை எனப் புணர்ந்தது.

**20. பெருங்களிறு – பிரித்தெழுதுக.**

A) பெரு + களிறு B) பெரிய + களிறு
C) பெருமை + களிறு D) பெருங் + களிறு

**விளக்கம் :** **விடை : C**

பெருமை + களிறு
'ஈறுபோதல்' விதிப்படி, மை விகுதி கெட்டு பெரு+ களிறு என்றானது.
'இனம் மிகல்' விதிப்படி, வருமொழியின் முதல் எழுத்திற்கு இனமான 'ங்' தோன்றி பெருங்களிறு எனப் புணர்ந்தது.

**21. நாற்கரணம் – பிரித்தெழுதுக .**

A) நான்கு + அரணம் B) நான் + கரணம்
C) நாண் + கரணம் D) நான்கு + கரணம்

**விளக்கம் :** **விடை : D**

நான்கு + கரணம்
'நான்கென்னும் எண்ணின் ஈற்றுயிர் மெய்கெடும்' என்ற விதிப்படி, நிலைமொழியில் உள்ள 'கு கெட்டு நான் + கரணம் என்றானது.
'தனிக்குறில் முன் ஒற்று புணர்ச்சி' விதிப்படி, நிலைமொழியின் ஈற்றில் னகர, லகர ஒற்றுகள் வந்து, வருமொழியின் முதலில் வல்லினம் வந்தால், அந்த ஒற்றுகள் றகரமாகத் திரியும். எ . கா : பொன் + குடம் – பொற்குடம், கல் + சிலை – கற்சிலை.
நான் + கரணம் – நிலைமொழி ஈற்றில் னகர ஒற்று வந்து, வருமொழியின் முதலில் வல்லினம் வந்ததால், நாற்கரணம் எனப் புணர்ந்தது.

**22. கண்டெடுக்கப்பட்டுள்ளன – பிரித்தெழுதுக.**

A) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன
B) கண்டெடுக்க + பட்டுள்ளன
C) கண் + டெடுக்க + பட்டுள்ளன
D) கண்டெடுக்க + பட்டு + உள்ளன

**விளக்கம் :** **விடை : A**

கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன.
'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதிப்படி,
கண்ட் + எடுக்கப்பட்டு என்றானது.
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி, கண்டெடுக்கப்பட்டு எனப் புணர்ந்தது.

# புவியியல்

- பேரண்டம் மற்றும் சூரிய குடும்பம்
- புவி மாதிரி
- புவியின் உள்ளமைப்பு
- நிலத்தோற்றங்கள்
- மக்கள்தொகையும் குடியிருப்புகளும்
- இந்தியா – அமைவிடம்
- இயற்கை அமைவுகள்
- பருவ மழை, மழைபொழிவு, வானிலை மற்றும் காலநிலை
- நீர் வளங்கள் – ஆறுகள்
- மண், கனிம வளங்கள் மற்றும் இயற்கை வளங்கள்
- காடு மற்றும் வன உயிரினங்கள்
- வேளாண் முறைகள்
- போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு
- இந்தியா மற்றும் தமிழ்நாடு மக்கள்தொகை
  அடர்த்தி மற்றும் பரவல்
- பேரிடர், பேரிடர் மேலாண்மை
- சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம்
- புவியியல் அடையாளங்கள்
- கண்டங்களை ஆராய்தல்
  (ஆசியா, ஐரோப்பா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா,
  ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா, அண்டார்டிகா)

# பேரண்டம் மற்றும் சூரிய குடும்பம்

பெருவெடிப்பு (Big Bang) என்ற ஒரு நிகழ்வு ஏற்பட்டதினால் எண்ணிலடங்கா விண்மீன்களும், வான்பொருட்களும் தோன்றின. இவை அனைத்தையும் பொதுவாக '**பேரண்டம்**' (Universe) என அழைத்தனர். இதனை '**அண்டம்**' (Cosmos) என்றும் குறிப்பிடுகின்றனர்.

✦ பேரண்டத்தின் படிநிலை (Hierarchy of the Universe)

1. பேரண்டம்
2. விண்மீன் திரள் மண்டலம்
3. சூரியக் குடும்பம்
4. கோள்கள்
5. துணைக் கோள்கள்

**பேரண்டம் : (Universe)**

✦ சுமார் 15 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட பெருவெடிப்பின் போது பேரண்டம் உருவானதாக வானியல் அறிஞர்கள் நம்புகின்றனர். இப்பேரண்டமானது கோடிக்கணக்கான விண்மீன் திரள் மண்டலங்கள், விண்மீன்கள், கோள்கள், வால் நட்சத்திரங்கள், சிறுகோள்கள், விண்கற்கள் மற்றும் துணைக் கோள்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

**விண்மீன் திரள் மண்டலம் : (Galaxy)**

✦ விண்மீன் திரள் மண்டலம் என்பது ஈர்ப்பு விசையால் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கும் நட்சத்திரங்களின் தொகுப்பாகும்.

✦ வான்வெளியில் விண்மீன் திரள் மண்டலங்கள் சிதறியும் குழுவாகவும் காணப்படுகின்றன.

✦ பெருவெடிப்பு நிகழ்வுக்குப் பிறகு சுமார் 5 பில்லியன் வருடங்களுக்குப் பின் '**பால்வெளி விண்மீன் திரள் மண்டலம்**' (Milky Way Galaxy) உருவானது.

✦ நமது சூரியக்குடும்பம் பால்வெளி விண்மீன் திரள் மண்டலத்தில் உள்ளது.

✦ புவிக்கு அருகில் காணப்படும் விண்மீன் திரள் மண்டலங்கள் – **ஆண்ட்ரோமெடா** (Andromeda), **மெகல்லனிக் க்ளவுட்ஸ்** (Megellanic Clouds).

**சூரியக் குடும்பம் : (Solar System)**

✦ '**சோலார்**' என்ற சொல்லானது '**சூரியக் கடவுள்**' என்று பொருள்படும் 'Sol' என்ற இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டது. சூரியக் குடும்பம் சுமார் 4.5 பில்லியன் வருடங்களுக்கு முன்பு உருவானதாக நம்பப்படுகிறது.

**சூரியக் குடும்பத்தில் அடங்கியுள்ளவை :**

✦ சூரியன், எட்டு கோள்கள், குறுங்கோள்கள், துணைக் கோள்கள், வால் நட்சத்திரங்கள், சிறுகோள்கள் மற்றும் விண்கற்கள். சூரியக் குடும்பம் என்பது ஈர்ப்பு விசையால் பிணைக்கப்பட்டுள்ள ஓர் அமைப்பாகும்.

**சூரியன் : (Sun)**

✦ சூரியக் குடும்பத்தின் மையத்தில் சூரியன் அமைந்துள்ளது. சூரியக் குடும்பத்தில் உள்ள அனைத்து வான் பொருட்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன.

✦ சூரியக் குடும்பத்தின் மொத்த நிறையில் சூரியன் 99.8% உள்ளது. ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் போன்ற வாயுக்களால் ஆனது.

✦ தானே ஒளியை உமிழக்கூடிய தன்மை பெற்றது. சூரியன் ஒரு விண்மீன் ஆகும்.

✦ சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை 6000°C ஆகும். சூரியக் குடும்பத்தின் அனைத்து கோள்களுக்கும் வெப்பத்தையும் ஒளியையும் சூரியன் அளிக்கிறது. சூரியனின் வெப்பநிலை புவியின் மேற்பரப்பை வந்தடைய சுமார் 8.3 நிமிடங்கள் ஆகின்றது.

**கோள்கள் : (Planets)**

✦ '**கோள்**' என்றால் '**சுற்றி வருபவர்**' என்பது பொருளாகும். சூரியக் குடும்பத்தில் எட்டு கோள்கள் உள்ளன. அவை புதன், வெள்ளி, புவி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகும்.

**சுற்றுப்பாதை :**

✦ கோள்கள் சூரியனைச் சுற்றி வரக்கூடிய பாதை '**சுற்றுப்பாதை**' எனப்படுகிறது. கோள்கள் அனைத்தும் தமது பாதையை விட்டு விலகாமல் சூரியனைச் சுற்றி வருவதற்கு சூரியனின் ஈர்ப்பு விசையே காரணமாகும்.

✦ வெள்ளி மற்றும் யுரேனஸ் கோள்களைத் தவிர ஏனைய கோள்கள் அனைத்தும் சூரியனை எதிர் கடிகாரச் சுற்றில் அதாவது மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றி வருகின்றன.

✦ சூரியனுக்கு அருகிலுள்ள நான்கு கோள்களான புதன், வெள்ளி, புவி மற்றும் செவ்வாய் ஆகிய நான்கும் '**உட்புறக் கோள்கள்**' அல்லது எனப்படுகின்றன.

✦ பாறைகளால் ஆன இக்கோள்கள் அளவில் சிறியன. இக்கோள்களின் மேற்பரப்பில் மலைகள், எரிமலைகள் மற்றும் தரைக்குழிவுப் பள்ளங்கள் (Craters) காணப்படுகின்றன.

✦ கடைசி நான்கு கோள்களான வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகியன '**வெளிப்புறக் கோள்கள்**' அல்லது **Outer Planet or Jovian Planets** எனப்படுகின்றன.

✦ இக்கோள்கள் வாயுக்களால் நிரம்பிக் காணப்படுவதால் '**வளிமக் கோள்கள்**' (Gaseous Planets) எனவும் அழைக்கப்படுகின்றன.

**சிறுகோள் மண்டலம்:**

✦ **செவ்வாய்** மற்றும் **வியாழன்** கோள்களுக்கு இடையே காணப்படும் பகுதி 'சிறுகோள் மண்டலம்' எனப்படுகிறது.

**புதன் : (மிக அருகிலுள்ள கோள்) (Mercury)**

✦ சூரியனுக்கு அருகில் முதலில் இருக்கும் புதன் கோளானது மற்ற கோள்களை விட மிகவும் சிறியதாகும்.

✦ இது ரோமானியக் கடவுள்களின் தூதுவரான '**மெர்க்குரி**'யின் பெயரால் அழைக்கப்படுகிறது.

✦ நீர் மற்றும் வாயு இக்கோளில் கிடையாது. வளிமண்டலம் இக்கோளில் இல்லாததால் பகலில் அதிக வெப்பமும் இரவில் கடுங்குளிரும் நிலவுகிறது. இதற்கு துணைக்கோள் எதுவும் இல்லை.

✦ அதிகாலையிலும் அந்திப் பொழுதிலும் இக்கோளை நாம் வெறும் கண்களால் காணமுடியும்.

**வெள்ளி (வெப்பமான கோள்) : (Venus)**

✦ வெள்ளி, சூரியனிடமிருந்து இரண்டாவதாக அமைந்துள்ளது.

✦ புவியைப் போன்றே ஒத்த அளவுள்ளதால் வெள்ளியும் புவியும் '**இரட்டைக் கோள்கள்**' எனப்படுகின்றன.

✦ இதன் தற்சுழற்சி (Rotation) காலம் மற்ற கோள்களைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. வெள்ளி தன்னைத் தானே சுற்றிக் கொள்ள '**243 நாள்கள்**' எடுத்துக் கொள்கிறது. இது தன்னைத்தானே கிழக்கிலிருந்து மேற்காகச் சுற்றிக் கொள்கிறது (கடிகாரச் சுற்று).

✦ துணைக்கோள்கள் கிடையாது. அன்பு மற்றும் அழகைக் குறிக்கும் ரோமானியக் கடவுளான '**வீனஸ்**' என்ற பெயரால் இக்கோள் அழைக்கப்படுகிறது.

✦ காலையிலும் மாலையிலும் விண்ணில் காணப்படுவதால் '**விடிவெள்ளி**' என்றும் '**அந்திவெள்ளி**' என்றும் அழைக்கப்படுகிறது.

✦ நிலவிற்கு அடுத்தபடியாக இரவில் பிரகாசமாகத் தெரியும்.

**புவி (உயிர்க்கோளம்) : (Earth)**

✦ சூரியனிடமிருந்து மூன்றாவதாக அமைந்துள்ள கோள் புவியாகும். இது ஐந்தாவது பெரிய கோளாகும்.

✦ **நீலக்கோள்:** புவியின் மேற்பரப்பானது 3/4 பகுதி நீரால் சூழப்பட்டுள்ளதால் '**நீலக்கோள்**' என்றும் '**நீர்க்கோள்**' என்றும் அழைக்கப்படுகிறது.

- ✦ **துணைக்கோள் (1) :** நிலவு
- ✦ **அளவு :** புவியின் துருவ விட்டம் 12,714 கி.மீ. மற்றும் நிலநடுக்கோட்டின் விட்டம் 12,756 கி.மீ.
- ✦ புவி, சூரியனை விநாடிக்கு 30 கி.மீ. வேகத்தில் சுற்றி வருகிறது.
- ✦ நிலம், நீர் மற்றும் வளிமண்டலம் காணப்படுவதால் உயிரினங்கள் வாழத் தகுதியான சூழல் நிலவுகிறது.
- ✦ ரோமானிய மற்றும் கிரேக்கக் கடவுள்களின் பெயரால் அழைக்கப்படாத ஒரே கோள் புவியாகும்.

**செவ்வாய் (செந்நிறக் கோள்) (Mars)**

- ✦ சூரியனிடமிருந்து நான்காவதாகக் காணப்படும் கோளான செவ்வாய் அளவில் புதனுக்கு அடுத்தபடியாக இரண்டாவது சிறிய கோளாகும்.
- ✦ இக்கோள் ரோமானியப் போர்க் கடவுளான மார்ஸ் (Mars) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.
- ✦ இதன் மேற்பரப்பில் **'இரும்பு ஆக்ஸைடு'** உள்ளதால் செந்நிறமாகக் காணப்படுகிறது. எனவே **'சிவந்தகோள்'** அல்லது **'செந்நிறக்கோள்'** என்றும் அழைக்கப்படுகிறது.
- ✦ இக்கோளின் வளிமண்டலம் மிகவும் மெல்லியதாகும். இதன் துருவப் பகுதிகளில் புவியைப் போன்றே பனியுறைகள் (Ice caps) காணப்படுகின்றன.
- ✦ **துணைக்கோள்கள் (2) :** போபஸ் (Phobos) மற்றும் டீமஸ் (Deimos).

**வியாழன் (பெரியக்கோள்) : (Jupiter)**

- ✦ சூரியக் குடும்பத்தின் மிகப்பெரிய கோளான வியாழன் சூரியனிடமிருந்து ஐந்தாவதாக அமைந்துள்ளது. இது ரோமானியர்களின் முதன்மைக் கடவுளான **'ஜூபிடர்'** என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.
- ✦ நிலா மற்றும் வெள்ளிக்கு அடுத்தபடியாக விண்ணில் பிரகாசமாகத் தெரிவது வியாழன் ஆகும்.
- ✦ இக்கோள் தன் அச்சில் மிகவும் வேகமாகச் சுழலக்கூடியதாகும். இதன் வளிமண்டலத்தில் ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் வாயுக்கள் காணப்படுகின்றன.
- ✦ **துணைக்கோள்கள் (80–க்கும் மேல்) :** இவற்றில் மிகப்பெரிய துணைக்கோள்கள் சிலவற்றின் பெயர்களாவன; அயோ (IO), யூரோப்பா (Europa), கனிமீடு (Ganymede) மற்றும் கேலிஸ்டோ (Callisto).

**சனி (வளையங்களைக் கொண்ட கோள்) (Saturn)**

- ✦ சூரியனிடமிருந்து ஆறாவதாக அமைந்துள்ள இக்கோள் சூரியக் குடும்பத்தின் இரண்டாவது பெரிய கோளாகும்.
- ✦ ரோமானிய வேளாண்மைக் கடவுளின் பெயரால் (Saturn) இது அழைக்கப்படுகிறது.
- ✦ பாறைத்துகள்கள், பனித்துகள்கள் மற்றும் தூசுக்களால் ஆன பல பெரிய வளையங்கள் இக்கோளைச் சுற்றி காணப்படுகின்றன.
- ✦ சனிக்கோளின் **'தன் ஈர்ப்புத்திறன்'** (Specific Gravity) நீரை விடக் குறைவாகும்.
- ✦ **துணைக்கோள்கள் (80–க்கும் மேல்) :** அவற்றில் மிகப்பெரியது **'டைட்டன்'** (Titan) ஆகும். சூரியக் குடும்பத்தில் காணப்படும் துணைக் கோள்களில் **'நைட்ரஜன்'** மற்றும் **'மீத்தேன்'** ஆகிய வாயுக்களைக் கொண்ட வளிமண்டலம் மற்றும் மேகங்கள் சூழ்ந்து காணப்படுகின்ற ஒரே துணைக்கோள் **'டைட்டன்'** ஆகும்.
- ✦ வியாழன் மற்றும் சனி ஆகிய கோள்களுக்கு பல துணைக் கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

**யுரேனஸ் (உருளும் கோள்) : (Uranus)**

- ✦ இது சூரியனிடமிருந்து ஏழாவதாக அமைந்துள்ளது. **'மீத்தேன் வாயு'** இக்கோளில் உள்ளதால் பச்சை நிறமாகத் தோன்றுகிறது.
- ✦ கிரேக்க விண் கடவுளான **'யுரேனஸ்'** என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.
- ✦ இது தன்னைத்தானே கிழக்கிலிருந்து மேற்காகச் சுற்றிக் கொள்கிறது. (கடிகாரச்சுற்று)
- ✦ இதன் அச்சு மிகவும் சாய்ந்து காணப்படுவதால் தன் சுற்றுப் பாதையில் உருண்டோடுவது போல சூரியனைச் சுற்றி வருகிறது.
- ✦ **துணைக்கோள்கள் (27) :** யுரேனஸின் 27 துணைக் கோள்களில் மிகப் பெரியது **'டைட்டானியா'** (Titania) ஆகும்.
- ✦ **'வில்லியம் ஹெர்ஷல்'** என்ற வானியல் அறிஞரால் 1781–ஆம் ஆண்டு யுரேனஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தொலைநோக்கியால் கண்டுபிடிக்கப்பட்ட முதல்கோள் இதுவாகும்.

**நெப்டியூன் (குளிர்ந்தகோள்) : (Neptune)**

- ✦ சூரியனிடமிருந்து எட்டாவதாக அமைந்துள்ள கோள் இதுவாகும்.
- ✦ ரோமானியக் கடல் கடவுளான **'நெப்டியூன்'** என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.
- ✦ சூரியக் குடும்பத்தில் மிகத் தொலைவில் காணப்படுவதால் மிகவும் குளிர்ந்து காணப்படுகிறது. இக்கோளில் பலத்த காற்று வீசும். இக்கோளில் காணப்படும் நீலம் மற்றும் வெள்ளை நிறமானது யுரேனஸிலிருந்து இதை வேறுபடுத்திக் காட்டுகிறது.
- ✦ **துணைக்கோள்கள் (14) :** நெப்டியூனின் 14 துணைக் கோள்களில் மிகப் பெரியது **'டிரைட்டன்'** (Triton) ஆகும்.

**குறுங்கோள்கள் : (Dwarf Planets)**

- ✦ நெப்டியூன் கோளுக்கு அப்பால் தொலைவில் காணப்படும் சிறிய விண்பொருட்கள் குறுங்கோள்கள் ஆகும்.
- ✦ இவை மிகவும் குளிர்ந்தும், ஒளியில்லாமலும் காணப்படுகின்றன.
- ✦ கோள வடிவில் காணப்படும் இவை கோள்களைப் போல் அல்லாமல் தமது சுற்றுப் பாதையை பிற குறுங்கோள்களுடன் பகிர்ந்து கொள்ளும்.
- ✦ **சூரியக் குடும்பத்தில் காணப்படும் குறுங்கோள்கள் (5) :** புளூட்டோ, செரஸ், ஈரிஸ், மேக்மேக் மற்றும் ஹௌமியா.

**நிலவு (புவியின் துணைக்கோள்) :**

- ✦ கோள்களைச் சுற்றி வரும் விண்பொருட்கள் **'துணைக்கோள்கள்'** எனப்படுகின்றன.
- ✦ புவியின் ஒரே துணைக்கோள் நிலவு ஆகும். இது புவியில் 1/4 பங்கு அளவுடையது. புவியிலிருந்து 3,84,400 கி.மீ தொலைவில் உள்ளது.
- ✦ நிலவு தன்னைத் தானே சுற்றிக் கொள்ள எடுத்துக் கொள்ளும் கால அளவும் புவியைச் சுற்றிவர எடுத்துக் கொள்ளும் கால அளவும் ஏறக்குறைய ஒன்றாகும். அதாவது 27 நாட்கள் 8 மணி நேரமாகும்.
- ✦ நிலவிற்கு வளிமண்டலம் கிடையாது. இதன் காரணமாக விண்கற்களின் தாக்கத்தால் இதன் மேற்பகுதியில் அதிகளவில் தரைக்குழிப் பள்ளங்கள் காணப்படுகின்றன.
- ✦ மனிதன் தரையிறங்கிய ஒரே விண்பொருள் நிலவாகும்.

**சிறுகோள்கள் : (Asteroids)**

- ✦ சூரியனைச் சுற்றிவரும் சிறிய திடப் பொருட்களே **'சிறுகோள்கள்'** எனப்படுகின்றன. இவை அளவில் மிகவும் சிறியதாக இருப்பதால் கோள்கள் என அழைக்கப்படுவதில்லை.

**வால் விண்மீன்கள் : (Comets)**

- ✦ வால் விண்மீன்கள் திடப் பொருட்களால் ஆன தலைப்பகுதியையும், வாயுக்களால் ஆன வால் பகுதியையும் கொண்டுள்ளது. தலைப்பகுதியானது பனிக்கட்டியால் பிணைக்கப்பட்டுள்ளது.
- ✦ புவிக்கு அருகில் 76 வருடங்களுக்கு ஒருமுறை வரக்கூடிய **'ஹேலி'** (Halley) வால் விண்மீன் கடைசியாக 1986–ஆம் ஆண்டு வானில் தென்பட்டது. இது மீண்டும் 2061–ஆம் ஆண்டு விண்ணில் தோன்றும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**விண்கற்கள் (Meteors) மற்றும் விண் வீழ்கற்கள் (Meteoroids) :**

- ✦ சூரியக் குடும்பத்தில் காணப்படும் சிறு கற்கள் மற்றும் உலோகப் பாறைகளால் ஆன விண்பொருட்கள் **'விண்கற்கள்'** எனப்படுகின்றன.

SURA'S

✦ இந்த விண்கற்கள் புவியின் வளிமண்டலத்தை அடையும் போது உராய்வின் காரணமாக எரிந்து ஒளிர்வதால் **'எரிநட்சத்திரம்'** (Shooting Stars) என்றும் அழைக்கப்படுகிறது.

**விண்வீழ்கற்கள் :**

✦ வளிமண்டலத்தைத் தாண்டி புவியின் மேற்பரப்பைத் தாக்கும் விண்கற்கள் **'விண் வீழ்கற்கள்'** எனப்படுகின்றன.

### புவியின் சுழற்சி :

**புவியின் வடிவமும் சாய்வும்**

✦ கோள வடிவமான புவி, தன் அச்சில் சுழலுகிறது.

✦ புவியின் வட துருவத்திலிருந்து தென் துருவம் வரை செல்லக்கூடிய ஒரு கற்பனைக்கோடு புவியின் **'அச்சு'** எனப்படுகிறது. புவி தன் அச்சில் 23½° சாய்ந்து தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது.

✦ புவியின் சுற்று வட்டப் பாதைக்கு 66½° கோணத்தை இந்த சாய்வு ஏற்படுத்துகிறது.

**சுழலுதல் :** (Rotation)

✦ புவி தன் அச்சில் தன்னைத் தானே சுற்றுவது **'சுழலுதல்'** எனப்படுகிறது.

✦ மேற்கிலிருந்து கிழக்காகச் சுழலும் புவியானது, ஒரு முறை சுழலுவதற்கு 23 மணி நேரம், 56 நிமிடங்கள், 4.09 விநாடிகள் எடுத்துக் கொள்கிறது. புவி ஒரு முறை சுழலுவதற்கு எடுத்துக் கொள்ளும் நேரம் **'ஒரு நாள்'** எனப்படுகிறது.

✦ புவி கோள வடிவமாக உள்ளதால் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சூரிய வெளிச்சம் புவியின் ஒரு பகுதியில் மட்டுமே படுகிறது. அப்பகுதி **'பகல்'** எனவும், ஒளிபடாத பகுதி **'இரவு'** எனவும் அழைக்கப்படுகிறது.

✦ புவியின் ஒளிபடும் பகுதியையும் ஒளிபடாத பகுதியையும் பிரிக்கும் கோடு **'ஒளிர்வு வட்டம்'** (Terminator Line) எனப்படுகிறது.

**சுற்றுதல் :** (Revolution)

✦ புவி தன் நீள்வட்டப் பாதையில் (Elliptical Orbit) சூரியனைச் சுற்றிவரும் நகர்வு **'சுற்றுதல்'** எனப்படுகிறது.

✦ **வேகம் :** விநாடிக்கு 30 கி.மீ. வேகத்தில் புவி சூரியனைச் சுற்றி வருகிறது.

✦ **ஆண்டு :** புவி ஒருமுறை சூரியனைச் சுற்றிவர 365¼ நாள்கள் ஆகிறது. இது தோராயமாக 365 நாள்களாக எடுத்துக் கொள்ளப்பட்டு **'ஓர் ஆண்டு'** எனப்படுகிறது.

**லீப் வருடம் :** (Leap Year)

✦ ஒவ்வோர் ஆண்டிலும் மீதமுள்ள 1/4 நாட்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை, ஒரு நாளாகக் கணக்கிடப்பட்டு பிப்ரவரி மாதத்தில் கூடுதலாக ஒரு நாள் சேர்க்கப்படுகிறது.

✦ அதாவது நான்கு வருடங்களுக்கு ஒருமுறை பிப்ரவரி மாதத்திற்கு 29 நாட்களாக இருக்கும். அந்த வருடம் **'லீப் வருடம்'** என அழைக்கப்படுகிறது.

**சூரியனை சுற்றுவதால் ஏற்படும் நிகழ்வுகள் :**

✦ பருவகாலங்கள் தோன்றுகின்றன.

✦ மார்ச் 21 முதல் செப்டம்பர் 23 வரை புவியின் வட அரைக்கோளம் சூரியனை நோக்கி சாய்ந்து காணப்படும். அதே சமயம் தென் அரைக்கோளம் சூரியனிடமிருந்து விலகிக் காணப்படும்.

✦ செப்டம்பர் 23 முதல் மார்ச் 21 வரை புவியின் தென் அரைக்கோளம் சூரியனை நோக்கி சாய்ந்தும், வட அரைக்கோளம் சூரியனிடமிருந்து விலகியும் காணப்படும்.

**சமப் பகலிரவு நாட்கள் :** (Equinoxes)

✦ புவி தன் சுற்றுப் பாதையில் சூரியனைச் சுற்றி வருவதால் சூரியன் நிலநடுக்கோட்டிற்கு வடக்காகவும், தெற்காகவும் நகர்வதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது.

✦ இதனால் மார்ச் 21 மற்றும் செப்டம்பர் 23 ஆகிய நாள்கள் சூரியனின் கதிர்கள் நிலநடுக் கோட்டுப் பகுதியில் செங்குத்தாக விழும். இதன் காரணமாக புவியின் அனைத்துப் பகுதிகளிலும் மேற்கண்ட இரண்டு நாட்களிலும் பகல் மற்றும் இரவுப் பொழுது சமமாகக் காணப்படும்.

**கோடைக்காலக் கதிர் திருப்பம் :** (Summer Solstice)

✦ ஜூன் 21 அன்று கடகரேகை மீது சூரியனின் செங்குத்துக் கதிர்கள் விழுவதால் அந்நாளில் வட அரைக் கோளம் மிக நீண்ட பகல் பொழுதையும், தென் அரைக்கோளம் நீண்ட இரவையும் கொண்டிருக்கும். இந்நிகழ்வு **'கோடைக்காலக் கதிர் திருப்பம்'** எனப்படுகிறது.

**குளிர்காலக் கதிர் திருப்பம் :** (Winter Solstice)

✦ டிசம்பர் 22 அன்று மகர ரேகையின் மீது சூரியனின் செங்குத்துக் கதிர்கள் விழுகின்றன. இந்நிகழ்வு **'குளிக்காலக் கதிர் திருப்பம்'** எனப்படுகிறது.

✦ அந்நாளில் தென் அரைக்கோளம் நீண்ட பகல்பொழுதையும், வட அரைக்கோளம் நீண்ட இரவையும் கொண்டிருக்கும்.

| வ.எண் | கோள் | சூரியனிடமிருந்து உள்ள சராசரி தூரம் (மில்லியன் கி.மீ) | சுற்றுதல் காலம் | தற்சுழற்சி காலம் |
|---|---|---|---|---|
| 1. | புதன் | 57.9 | 88 நாட்கள் | 58.7 நாட்கள் |
| 2. | வெள்ளி | 108.2 | 224.7 நாட்கள் | 243 நாட்கள் |
| 3. | புவி | 149.6 | 365.3 நாட்கள் | 23 மணிநேரம் 56 நிமிடங்கள் 4 விநாடிகள் |
| 4. | செவ்வாய் | 227.9 | 687 நாட்கள் | 24 மணிநேரம் 37 நிமிடங்கள் |
| 5. | வியாழன் | 778.6 | 11.9 ஆண்டுகள் | 9 மணிநேரம் 51 நிமிடங்கள் |
| 6. | சனி | 1433.5 | 29.5 ஆண்டுகள் | 10 மணிநேரம் 14 நிமிடங்கள் |
| 7. | யுரேனஸ் | 2872.5 | 84 ஆண்டுகள் | 17 மணிநேரம் 14 நிமிடங்கள் |
| 8. | நெப்டியூன் | 4495.1 | 164.8 ஆண்டுகள் | 16 மணிநேரம் 3 நிமிடங்கள் |

- ✦ நீலத் திமிங்கலம், கடற்பசு போன்ற கடல் விலங்கினங்கள் மற்றும் கடல் பறவைகளான பென்குவின், அல்பட்ராஸ், போலார் ஸ்குவா மற்றும் ஸ்டவுட் இங்கு காணப்படுகின்றன.
- ✦ இங்கு காணப்படும் அனைத்து விலங்குகள் மற்றும் பறவைகள் குளிர்கால நிலையை எதிர்கொள்ள தங்கள் உடலில் **புளுபர்** (Blubber) எனப்படும் அடர்த்தியான கொழுப்பு அடுக்கினைக் கொண்டுள்ளன.
- ✦ பென்குயின் பறவைகளால் பறக்க இயலாது. இவை இறக்கைகளுக்குப் பதிலாக நீந்துவதற்குப் பயன்படும் **பிலிப்பர்** (Flipper) எனப்படும் அகலமான பாதங்களைக் கொண்டுள்ளன.
- ✦ முதுகெலும்பற்ற சில உயிரினங்கள் இக்கண்டத்தின் நிலவாழ் விலங்கினங்களாகும்.

அண்டார்டிகாவிலுள்ள உயரமான சிகரம் **வின்சன் மாஸிப்** (5140 மீ.) ஆகும். இது இக்கண்டத்திலுள்ள **சென்டினல்** மலைத் தொடரின் தென்பகுதியில் அமைந்துள்ளது. இக்கண்டத்திலுள்ள **லாம்பர்ட் பனியாறு** உலகின் மிகப்பெரிய பனியாறு ஆகும்.

### கனிமங்கள்

அண்டார்டிகா கண்டத்தில் இருக்கும் கனிம வளங்கள் குறித்து ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சர்வதேச ஒப்பந்தத்தின்படி இக்கண்டத்தில் எந்தக் கனிமத்தையும் வெட்டி எடுக்க அனுமதி இல்லை.

### அண்டார்டிகாவிற்கு பயணம் மேற்கொண்டவர்கள்

- ✦ 1912–இல் ஆங்கில மற்றும் நார்வே நாட்டுக் குழுவினர் தென்துருவத்தை அடைந்தனர்.
- ✦ இந்தியாவின் 21 உறுப்பினர்களைக் கொண்ட பயணக் குழு டாக்டர் S.Z. காசிம் அவர்களின் தலைமையில் அண்டார்டிகாவிற்கு பயணம் மேற்கொண்டனர். இக்குழு 1981 டிசம்பர் 6–ஆம் நாள் கோவாவில் இருந்து புறப்பட்டு 1982 ஜனவரி 9–ஆம் நாள் அண்டார்டிகாவைச் சென்றடைந்தது.

### அண்டார்டிகாவில் ஆராய்ச்சி நிலையங்கள்

- ✦ அண்டார்டிகாவில் அமைக்கப் பெற்ற முதல் இந்திய ஆராய்ச்சி நிலையம் **தட்சிண் கங்கோத்திரி** ஆகும்.
- ✦ **மைத்ரேயி** மற்றும் **பாரதி** ஆகியவையும் அண்டார்டிகாவில் உள்ள இந்திய ஆராய்ச்சி நிலையங்கள் ஆகும்.
- ✦ அண்டார்டிகாவில் உள்ள மிகப்பெரிய ஆராய்ச்சி நிலையம் **மெக்முர்டோ** ஆகும். இது அமெரிக்க ஐக்கிய நாடுகளால் நிறுவப்பட்டது.

### அரோரா (விண்ணொளி)

- ✦ வட மற்றும் தென் காந்த துருவங்களுக்கு அருகில் இயற்கையாக தோன்றும் விண் ஒளி '**அரோரா**' எனப்படுகிறது. இது இளஞ்சிவப்பு, சிவப்பு மற்றும் பச்சை நிற ஒளியின் கலவையாகும்.
- ✦ சூரியனிலிருந்து வரும் மின்னூட்ட துகள்கள் வளிமண்டல மேலடுக்கிலுள்ள அணுக்களுடன் வினை புரிவதால் இது உண்டாகிறது.

| தென் துருவம் | வட துருவம் |
|---|---|
| தென்துருவத்தில் இந்த ஒளி **ஆஸ்ட்ராலிஸ் (அ) தென்துருவ ஜோதி** என்று அழைக்கப்படுகிறது. | வடதுருவத்தில் இந்த ஒளி **பொரியாலிஸ் (அ) வடதுருவ ஜோதி** என்று அழைக்கப்படுகிறது. |
| தென்துருவத்தில் அமைந்துள்ள நியூசிலாந்தின் பாக்லாந்து தீவுப்பகுதிகளில் இந்த ஒளியைக் காணலாம். | வட துருவத்தில் அலாஸ்காவில் இந்த ஒளியைக் காணலாம். |

## கூடுதல் தகவல்கள்

### உலக காலநிலை வகைகள்

| | பரவல் | காலநிலை | இயற்கைத்தாவரங்கள் | பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| வெப்பமான ஈரப்பதமிக்க நிலநடுக்கோட்டு காலநிலை (Hot wet Equatorial Climate) | ◆ 5° வடக்கு முதல் 5° தெற்கு வரை<br>◆ இது முக்கியமாக அமேசானின் தாழ்நிலைப் பகுதிகள், காங்கோ, மலேசியா மற்றும் கிழக்கு இந்தியத்தீவுகள் | ◆ சராசரி வெப்பநிலை<br>◆ 24-27°C<br>◆ வெப்பச்சலன மழையுடன் வருடாந்திர மழைஅளவு 250 செ.மீ<br>◆ வருட சராசரி வெப்பநிலை வேறுபாடு மிகவும் குறைவு | ◆ வெப்பமண்டல மழைக்காடுகள் இதில் பசுமைமாறா மரங்களான மகோனி எபோனி பியானஸ் எபிபைட்டிக் மற்றும் ஒட்டுண்ணி தாவரங்கள் இங்கு காணக்கிடைக்கும் | ◆ குறைந்த எண்ணிக்கையிலான ஆதிகால மக்கள் (primitive People) வசிக்கின்றனர்.<br>◆ வேட்டையாடுதல் மற்றும் இயற்கைப் பொருட்களை சேகரிப்பது தொழில்<br>◆ மாற்றிட வேளாண்முறை பெருமளவில் பின்பற்றப்படுகிறது. |
| வெப்பமண்டல பருவமழை மற்றும் கடல் காலநிலை (Tropical Monsoon and Tropical Marine Climate) | ◆ நிலநடுக்கோட்டின் இருபுறமும் 5° முதல் 30° வரை<br>◆ இந்தியா, மியான்மர், தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா, வடக்கு ஆஸ்திரேலியா | ◆ சூரியனின் வட மற்றும் தென் அரைக்கோள இடப் பெயர்வுகளால் குளிர்காலம் மற்றும் கோடைகாலத்தின் வெப்பநிலை வேறுபாடு அதிகமாக இருக்கும்.<br>◆ ஈரப்பதமற்ற கோடை கால சூழலில் சராசரி வெப்பநிலை 27° - 32° C<br>◆ மலை தடுப்பு மற்றும் புயல் மழைப்பொழிவுடன் தென்மேற்கு பருவக்காற்று பருவமழையைக் கொடுக்கும் | ◆ இலையுதிர் காடுகள்<br>◆ தேக்கு, சால், அஜாசியா உள்ளிட்ட மரங்கள் | ◆ வேளாண்மை சார்ந்த பொருளாதாரம்<br>◆ அரிசி, கரும்பு, சணல் போன்ற வேளாண் பொருட்கள் |

SURA'S

| | பரவல் | காலநிலை | இயற்கைத்தாவரங்கள் | பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| மிதவெப்ப கண்ட காலநிலை (ஸ்டெப்பி) (Temperate Continental Steppe Climate) | ◆ ஹங்கேரியின் புஸ்தாஸ், வட அமெரிக்காவிலுள்ள உருகுவே மற்றும் பிரெய்ரி, அர்ஜெண்டினாவின் பாம்பா, தென் ஆப்பிரிக்காவின் புஷ் ஆகிய பகுதிகள். | ◆ கண்டக் காலநிலை நிலவுவதால், கோடைக்காலத்தில் வெப்பநிலை மிக அதிகமாகவும் குளிர்காலத்தில் குளிர் மிக அதிகமாகவும் காணப்படும் | ◆ பகுதியளவு வறண்ட யுரேஷிய கண்டப்பகுதியின் குறைந்த தாவரங்களே காணப்படும். | ◆ கால்நடை மேய்த்தல், விரிவான மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட கோதுமை பயிரிடல் முறைகள். |
| சூடான் (அ) சவானா காலநிலை (Sudan (or) Savanna Climate) | ◆ நிலநடுக்கோட்டின் இருபுறமும் 5° முதல் 20° வரை<br>◆ தென் அமெரிக்காவின் ஓரினாகோ பள்ளத்தாக்கு, பிரேசிலின் காம்போஸ், மத்திய அமெரிக்காவின் மலைப்பகுதிகள் தெற்கு காங்கோ | ◆ மாறுபட்ட வெப்பம், மழை மற்றும் வறண்ட குளிர் காலநிலை வருடம் முழுவதும் 24 முதல் 27 C எனும் மிக அதிக சராசரி வெப்பநிலை நிலவும்<br>◆ இரவு–பகல் வெப்பநிலை வேறுபாடு மிக அதிகமாக இருக்கும் இது சூடான் வகை காலநிலையின் அம்சமாகும்<br>◆ சராசரி வருடாந்திர மழைப் பொழிவு 100 செ.மீ. முதல் 150 செ.மீ. வரை ஆகும் | ◆ உயரமான புற்கள் உயரம் குறைந்த மரங்கள்<br>◆ மரங்கள் இலையுதிர் தன்மையுடன் கடினமானதாக இருக்கும்.<br>◆ ஆஸ்திரேலியாவிலுள்ள புதர்காடுகளில் மாலீ, மல்வா, ஸ்பைனிஃபெக்ஸ் போன்றவை வளரும் | ◆ சவான பகுதிகளில் பழங்குயினர் வசிக்கின்றனர்<br>◆ மசாய் உள்ளிட்ட சில பழங்குடிகள் கால்நடை மேய்ச்சலில் ஈடுபட்டுள்ளனர்.<br>◆ வடக்கு நைஜீரியா பகுதியில் ஹௌசாக்கில் விவசாயிகளாக குடியேறியுள்ளனர் |
| வெப்பநிலை மிகுந்த பாலைவன மற்றும் இடைப்பகுதி காலநிலை (Hot Desert and Mid-Latitudinal Desert Climate) | ◆ நிலநடுக்கோட்டின் இருபுறமும் 15° முதல் 30° வரை.<br>◆ பெரும்பாலான வெப்பம் மிகுந்த பாலைவனங்கள் கண்டங்களின் மேற்குக் கரைப் பகுதியில் அமைந்துள்ளன. | ◆ ஒப்பு ஈரப்பதம் (Relative Humidity) மிகக் குறைவு. துணை வெப்ப மண்டல உயர் அழுத்த மண்டலத்தில் அமைந்துள்ளதால் காற்றழுத்தம் குறைந்து கொண்டே வருகின்றது.<br>◆ இடியுடன் கூடிய வெப்பச்சலன மழைப்பொழிவுகள் ஏற்படுகின்றன.<br>◆ ஆண்டு வெப்பநிலை வேறுபாடு (Dieurnal Temperature) மிகவும் அதிகம். | ◆ வறட்சியைத் தாங்கும் தாவரங்கள் (Xerotype). இத்தாவரங்கள் குறைந்த இலைகள் ஊசி வடிவ இலைகள் மற்றும் தடித்த இலைகள் உள்ளிட்ட தகவமைப்புகளைப் பெற்றுள்ளன. | ◆ இத்தகைய காலநிலை இப்பகுதி மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்குத் தடையாக உள்ளது. கலஹாரி பாலைவனத்தில் புஷ்மென் பழங்குடிகளும் ஆஸ்திரேலியப் பாலைவனத்தில் பிந்துபிகளும் வசிக்கின்றனர். |
| மிதவெப்ப மேற்கு விளிம்பு மத்தியத் தரைக்கடல் காலநிலை (Warm Temperate Western Margin : Mediterranean) | ◆ வெப்பமான வறண்ட கோடைகாலங்கள் குளிர்ச்சியான ஈரப்பதமிக்க குளிர்காலம். கோடைகாலத்தின் போது மத்திய தரைக்கடல் காலநிலையானது துணைவெப்பமண்டல உயரழுத்த செயல்களால் பாதிக்கப்பட்டு மழைபொழிவை குறைக்கிறது. அல்லது அறவே இல்லாமல் செய்து விடுகின்றது. | ◆ இது கலிபோர்னியா, ஆஸ்திரேலியாவின் மேற்கு மற்றும் தெற்குப்பகுதிகள், தென்ஆப்பிரிக்காவின் தென்மேற்குப்பகுதிகள், மத்திய சிலியின் சில பகுதிகள், மத்தியத்தரைக்கடல் பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகள் | ◆ ஓக், யூகலிப்ட்ஸ், ஜர்ரா, காரி ஆகிய பசுமை மாறா மரங்கள் காணக் கிடைக்கின்றன. பைன் ஃபிர்கள் செடார் மற்றும் சைப்ரெசெஸ் ஆகியவை பசுமைமாறா ஊசியிலை மரங்களாகும் | ◆ சிட்ரஸ் பழங்கள், இதர பழங்கள், ஒயின் மற்றும் தானியங்கள் உற்பத்தியைச் சார்ந்து பொருளாதாரம் இயங்குகிறது |

# இந்திய ஆட்சியியல்


- இந்திய அரசியலமைப்புச் சட்டம் 2
- மத்திய அரசு 8
- மாநில அரசு 12
- நீதித்துறை 16
- உள்ளாட்சி அமைப்புகள் 19
- பன்முகத் தன்மை 23
- சமத்துவம் மற்றும் சமயச்சார்பின்மை 24
- தேசிய சின்னங்கள் 26
- அரசாங்க அமைப்புகள் மற்றும் மக்களாட்சி 28
- அரசாங்கங்களின் வகைகள் 30
- தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள் 33
- பாதுகாப்பு மற்றும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை 36
- இந்தியாவின் சர்வதேச உறவுகள் 40
- மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் 45
- சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு 49
- பெண்கள் மேம்பாடு 51
- ஊடகமும் ஜனநாயகமும் 52
- அரசியலமைப்பு சார்ந்த நிறுவனங்கள் 53
- அரசியலமைப்பு சாரா நிறுவனங்கள் 56
- ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் 57
- பெண்களுக்கு அதிகாரமளித்தல் 6 1
- அரசியலமைப்பின் அட்டவணைகள் 63
- இந்திய அரசியலமைப்பின் ஷரத்துகள் - ஒரு பார்வை 64
- இந்திய அரசயலமைப்பின் முக்கிய சட்டத் திருத்தங்கள் 71
- சுதந்திர இந்தியாவின் முக்கிய கமிட்டிகளும் கமிஷன்களும் 73
- கூடுதல் தகவல்கள் 77

# இந்திய ஆட்சியியல்

## இந்திய அரசியலமைப்புச் சட்டம்

### அரசியலமைப்பு

ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படை அமைப்பே அரசியலமைப்பாகும். பல்வேறு துறைகள் மற்றும் மத்திய, மாநில அரசுகளிடையே அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் கட்டமைப்புடன் சம்பந்தப்பட்டது அரசியலமைப்பு ஆகும். அரசியலமைப்பு என்ற கொள்கை முதன்முதலில் **அமெரிக்க ஐக்கிய நாடுகளில்**(U.S.A) தோன்றியது.

### இந்திய அரசியலமைப்பு உருவாக்கம்

1946–ஆம் ஆண்டு அமைச்சரவை தூதுக்குழுவால் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் நிர்ணய சபையால் இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இச்சபையில் மொத்தம் 389 உறுப்பினர்கள் இருந்தனர்.

| | |
|---|---|
| மாகாணப் பிரதிநிதிகள் | 292 நபர்கள் |
| சுதேச அரசுகளின் நியமன உறுப்பினர்கள் | 93நபர்கள் |
| பலுசிஸ்தானின் சார்பில் | 1 நபர் |
| மாகாண முதன்மை ஆணையர்கள் சார்பில் | 3 நபர்கள் |
| அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் நடைபெற்ற நாள் | 1946–ஆம் ஆண்டு டிசம்பர் 9–ஆம் நாள் |
| இச்சபையின் தற்காலிகத் தலைவராக இருந்தவர் | Dr. சச்சிதானந்த சின்ஹா |
| நிரந்தர தலைவர் | Dr. இராஜேந்திர பிரசாத் |
| அரசியல் நிர்ணய சபையின் துணைத் தலைவர்களாக இருந்தவர்கள் | H.C. முகர்ஜி மற்றும் V.T. கிருஷ்ணமாச்சாரி |
| ஆலோசகர் | பி.என்.ராவ் |
| இந்திய அரசியலமைப்பு சட்ட வரைவுக் குழுத் தலைவர் | Dr. B.R. அம்பேத்கர். இவர் 'இந்திய அரசியலமைப்பின் தந்தை' ஆவார். |
| அரசியல் நிர்ணய சபையின் கூட்டத்தொடர் அமர்வுகள் மற்றும் நாள்கள் | 11 அமர்வுகளாக 166 நாட்கள் நடைபெற்றது. |
| முன்வைக்கப்பட்ட திருத்தங்களின் எண்ணிக்கை | 2473 |
| இந்திய அரசியலமைப்பின் இறுதி வடிவம் (1949–நவம்பர் 26 அன்று) | முகவுரை |
| | 22 பகுதிகள் |
| | 395 சட்டப்பிரிவுகள் (அ) ஷரத்துகள் |
| | 8 அட்டவணைகள் |
| இந்திய அரசியலமைப்பின் இறுதி வடிவம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் | 1949–ஆம் ஆண்டு நவம்பர் 26–ஆம் நாள் |
| இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் | 1950–ஆம் ஆண்டு ஜனவரி 26–ஆம் நாள் |

### அரசமைப்புச் சட்ட வரைவுக்குழு

✦ இதில் ஏழு பேர் இடம் பெற்றிருந்தனர்.

✦ இதன் தலைவராக பி.ஆர்.அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

✦ 1946–ஆம் ஆண்டு டிசம்பர் 9–ஆம் தேதி இதன் முதல் கூட்டம் நடைபெற்றது. அன்றே அரசமைப்புச் சட்டத்தை எழுதும் வேலைகள் தொடங்கி விட்டன.

✦ அண்ணல் அம்பேத்கர் '**இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை**' என அழைக்கப்படுகிறார்.

### அரசமைப்புச் சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் இறையான்மை

✦ **நோக்கம் :** ஒவ்வோர் இந்தியருக்குமான நீதி, தனி செயலுரிமை, சமத்துவத்தை உறுதி செய்வதோடு சகோதரத்துவத்தை வலியுறுத்துவது.

✦ **முகப்புரை :** இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முன்னுரைதான் '**முகப்புரை**' எனப்படுகிறது. இது இந்தியாவை **இறையாண்மை, சமத்துவம், மதச்சார்பின்மை, மக்களாட்சிக் குடியரசு** என வரையறை செய்கிறது.

✦ **இறையாண்மை :** ஒரு நாட்டின் உச்சநிலை அதிகாரம்.

✦ **மதச்சார்பின்மை : 'அரசிற்கான மதம்'** என்ற ஒன்று இல்லை என்பதால் அரசு அனைத்து மதங்களையும் ஒரே தளத்தில் வைத்து பார்க்கிறது.

### ஆட்சி வழி

✦ இந்திய அரசமைப்புச் சட்டமானது மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் சட்டமன்ற ஆட்சி முறையைப் (Parliamentary form of Government) பின்பற்றி ஆட்சி செய்ய வழிவகுக்கிறது.

✦ இந்த அமைப்பின்படி, நிறைவேற்றும் அதிகாரம் சட்டமன்றத்தின் (நாடாளுமன்றத்தின்) கூட்டுப் பொறுப்பாக இருக்கும். அதிக பெரும்பான்மைக் கொண்ட கட்சி ஆட்சியமைக்கும்.

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்புக் கூறுகள்

✱ உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிக நீளமானது.

✱ இதனுடைய பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.

✱ இது நெகிழாத்தன்மை கொண்டதாகவும் நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.

✱ கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.

✱ மத்தியில் மட்டுமல்லாமல் மாநிலங்களிலும் நாடாளுமன்ற முறையைத் தோற்றுவிக்கிறது.

✱ இந்தியாவைச் சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.

✱ சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.

✱ உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எவ்வித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.

✱ ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது.

✱ சிறுபான்மையினர், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்கு சிறப்பு விதிகள் மூலம் பல சலுகைகள் வழங்க வகை செய்கிறது.

SURA'S

## முகவுரை

'முகவுரை'(Preamble) என்ற சொல்லானது அரசியலமைப்பிற்கு 'அறிமுகம்' அல்லது 'முன்னுரை' என்பதைக் குறிக்கிறது. அரசியலமைப்பின் கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் இலட்சியங்களை முகவுரை உள்ளடக்கியுள்ளது. இது அரசியலமைப்பின் சுருக்கம் அல்லது சாராம்சத்தைக் கொண்டுள்ளது. இது **'அரசியலமைப்பின் திறவுகோல்'** எனப்படுகிறது.

1947–ஆம் ஆண்டு ஜனவரி 22–ஆம் நாள் இந்திய அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட **ஜவஹர்லால் நேருவின்** 'குறிக்கோள் தீர்மானத்தின்' அடிப்படையில் இந்திய அரசியலமைப்பின் முகவுரை அமைந்துள்ளது. இது 1976–ஆம் ஆண்டு 42–ஆவது சட்டத்திருத்தத்தின்படி திருத்தியமைக்கப்பட்டது. அதன்படி, **சமதர்மம், சமயச்சார்பின்மை, ஒருமைப்பாடு** என்ற மூன்று புதிய சொற்கள் சேர்க்கப்பட்டன. **'இந்திய மக்களாகிய நாம்'** என்ற சொற்றொடர் மூலம் முகவுரை தொடங்குவதால், இந்திய மக்களே இந்திய அரசியலமைப்பின் ஆதாரம் எனத் தெளிவாகிறது. இந்தியா ஒரு **இறையாண்மைமிக்க, சமதர்ம, சமயச்சார்பற்ற, ஜனநாயக, குடியரசு** என்று நமது அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது.

## குடியுரிமை

ஒரு நாட்டின் அரசாங்கத்தைப் பற்றியும் மக்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றியும் படிக்கும் இயல் குடிமையியல் ஆகும். 'குடிமகன்' (Citizen) என்ற சொல் **'சிவிஸ்'** (Civis) என்ற இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். 'பண்டைய ரோமாபுரியில் இருந்த நகர நாடுகளின் **"குடியிருப்பாளர்"** என்பது இதன் பொருளாகும். நகர நாடுகள் அமைப்பு மறைந்த பின்னர் இச்சொல் 'நாடுகளின் உறுப்பினர்' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது. இந்திய அரசியலமைப்பின் பகுதி II-இல் சட்டப்பிரிவு 5 முதல் 11 வரை குடியுரிமையைப் பற்றி விளக்குகின்றன.

### குடிமகன் – வரையறை

ஓர் அரசால் வழங்கப்பட்ட சட்ட உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிப்பவரும், அதே வேளையில் நாட்டின் சட்டங்களை மதித்து நடந்து, அவருக்கான கடமைகளை நிறைவேற்றுபவருமே அந்நாட்டின் குடிமகன் ஆவார்.

### குடியுரிமை – வரையறை

ஒரு குடிமகன் அவர் விரும்பும் காலம் வரையில் அந்நாட்டில் சட்டப்படியாக வசிக்கும் உரிமையை வழங்குதல் ஆகும்.

### குடியுரிமையின் வகைகள்

1. **இயற்கைக் குடியுரிமை :** பிறப்பால் இயற்கையாக பெறக்கூடிய குடியுரிமை.
2. **இயல்புக் குடியுரிமை :** இயல்பாக விண்ணப்பித்து பெறும் குடியுரிமை.

## இந்தியக் குடியுரிமையைப் பெறுதல்

இந்தியக் குடியுரிமைச் சட்டம், 1955 ஆனது இந்தியக் குடிமகன் தன்னுடைய குடியுரிமையைப் பெறுதலையும் நீக்குதலையும் பற்றிய விதிகளைக் கூறுகிறது. இச்சட்டம் இந்தியக் குடியுரிமையைப் பெறுவதற்காக ஐந்து வழிமுறைகளைக் கூறுகிறது.

### 1. பிறப்பால் குடியுரிமை பெறுதல்

✦ 1950 ஜனவரி 26 முதல் 1987 ஜூலை 1 வரை இந்தியாவில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர் எந்த நாட்டவராக இருப்பினும் அவர்கள் பிறப்பால் குடியுரிமை பெறுகின்றனர்.

✦ 1987 ஜூலை 1 மற்றும் அதற்குப் பின் இந்தியாவில் பிறக்கும் குழந்தையின் பெற்றோரில் ஒருவர் அச்சமயத்தில் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.

✦ 2004 டிசம்பர் 3 மற்றும் அதற்குப் பின் இந்தியாவில் பிறந்தவர்களின் பெற்றோர் இருவருமே இந்தியக் குடிமகன்களாக இருத்தல் (அ) பெற்றோரில் ஒருவர் இந்தியக் குடிமகனாகவும் மற்றொருவர் சட்ட விரோதமாக இந்தியாவிற்குள் இடம் பெயர்ந்தவராக இல்லாதிருந்தால் குடியுரிமை பெறுகின்றனர்.

### 2. வம்சாவழியால் குடியுரிமை பெறுதல்

✦ 1950 ஜனவரி 26 முதல் 1992 டிசம்பர் 10க்கு முன்னர் வெளிநாட்டில் பிறந்திருந்தாலும் அவருடைய தந்தை இந்தியக் குடிமகனாக இருக்கும் பட்சத்தில் அவர் வம்சாவழி மூலம் இந்தியக் குடியுரிமையைப் பெறுகிறார்.

✦ 1992 டிசம்பர் 10 மற்றும் அதற்குப் பின்னர் வெளிநாட்டில் பிறந்தவர்களின் பெற்றோரில் ஒருவர் அச்சமயத்தில் இந்தியக் குடிமகனாக இருந்தால் அவர் இந்தியக் குடியுரிமையைப் பெறுகிறார்.

✦ 2004 டிசம்பர் 3 முதல் வெளிநாட்டில் பிறந்தவர்கள், அவர்களுடைய பிறப்பினை ஒரு வருடத்திற்குள் இந்திய தூதரகத்தில் பதிவு செய்யவில்லை எனில் இந்திய வம்சாவழி குடிமகனாக முடியாது.

### 3. பதிவு செய்தல் மூலம் குடியுரிமை பெறுதல்

இந்திய வம்சாவழியைச் சார்ந்த ஒரு நபர் எந்த ஒரு நாட்டில் வசித்தாலும் (அ) பிரிக்கப்படாத இந்தியாவிற்கு வெளிப் பகுதியில் வசிப்பவராக இருந்தாலும் பதிவு செய்தலின் மூலம் குடியுரிமை பெறலாம்.

இந்தியக் குடிமகனை திருமணம் செய்த ஒருவர் பதிவின் மூலம் விண்ணப்பிக்கும் முன் ஏழு ஆண்டுகள் இந்தியாவில் வசித்தவராக இருத்தல் வேண்டும்.

### 4. இயல்புக் குடியுரிமை

எந்த ஒரு நாட்டிலும் குடிமகனாக இல்லாத ஒரு இந்தியர் அவர் வசிக்கும் நாட்டின் குடிமகனாவதைத் தடுக்கும் பொருட்டு இயல்புக் குடியுரிமை வழங்கப்படுகிறது.

வெளிநாட்டுக் குடியுரிமையை ஒருவர் துறக்கும் பட்சத்தில் அவருக்கு இயல்புக் குடியுரிமை வழங்கப்படுகிறது.

ஒருவர் இந்தியாவில் வசிக்கும் பட்சத்தில் (அ) இந்திய அரசுப்பணியில் இருக்கும்பட்சத்தில் (அ) ஆண்டு முழுவதும் இந்தியாவில் தங்கியிருக்கும் பட்சத்தில் இந்தக் குடியுரிமைப் பெறுகிறார்.

நல்ல பண்புகளையும் இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு மொழியில் போதிய அறிவினையும் பெற்ற ஒருவர் இந்தக் குடியுரிமையைப் பெற தகுதியுடையவர் ஆவார்.

மேலும், இயல்புக் குடியுரிமை மூலம் குடியுரிமைப் பெற விரும்பும் ஒருவர் 12 வருடங்கள் இந்தியாவில் சாதாரணமாக வசித்தவராகவும் குடியுரிமை சட்டத்தின் 3–ஆவது அட்டவணையில் உள்ள அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்பவராகவும் இருக்க வேண்டும்.

### 5. பிரதேசங்களை இணைத்தல் மூலம் பெறும் குடியுரிமை

எந்தவொரு வெளிநாட்டுப் பகுதியும் இந்தியாவுடன் இணையும் போது, இந்திய அரசு அப்பகுதி மக்களை இந்தியக் குடிமக்களாக ஏற்றுக் கொள்கிறது.

பாண்டிச்சேரி இந்தியாவுடன் இணைந்த பொழுது இந்திய அரசு அம்மக்களுக்கு 1962–இல் இந்தியக் குடியுரிமைக்கான ஆணையை வழங்கியது.

## இந்தியக் குடியுரிமையை இழத்தல்

குடியுரிமை சட்டம் 1955–இன்படி மூன்று முறைகளில் குடியுரிமைகளை இழக்க வாய்ப்புள்ளது.

### குடியுரிமையைத் துறத்தல் (தானாக முன்வந்து குடியுரிமையைத் துறத்தல்)

ஒருவர் வெளிநாட்டின் குடியுரிமையை பெறும்பட்சத்தில் அவரின் இந்தியக் குடியுரிமை அவரால் கைவிடப்படுகிறது.

### குடியுரிமை முடிவுக்கு வருதல் (சட்டப்படி நடைபெறுதல்)

இந்தியக் குடிமகன் ஒருவர் தாமாக முன்வந்து வெளிநாட்டின் குடியுரிமையை பெறும் பட்சத்தில் அவரது இந்தியக் குடியுரிமை தானாகவே முடக்கப்படுகிறது.

### குடியுரிமை மறுத்தல் (கட்டாயமாக முடிவுக்கு வருதல்)

மோசடி, தவறான பிரதிநிதித்துவம் (அ) அரசியலமைப்புச் சட்டத்திற்கு புறம்பாக செயல்படுதல் ஆகியவற்றின் மூலம் இந்தியக் குடியுரிமையை பெறும் ஒருவரின் குடியுரிமையை இந்திய அரசு ஓர் ஆணையின் மூலம் இழக்கச் செய்கிறது.

### ஒற்றைக் குடியுரிமை

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நமக்கு வழங்கும் ஒற்றைக் குடியுரிமையே '**இந்தியக் குடியுரிமை**' எனப்படுகிறது.

இந்தியக் குடிமக்கள் அனைவரும் இந்தியாவில் எங்கு பிறந்திருந்தாலும் வசித்தாலும் மாநில வேறுபாடின்றி, குடியுரிமைக்கான அனைத்து அரசியல் மற்றும் குடிமையியல் உரிமைகளை அனுபவிக்கின்றனர்.

முன்னுரிமை வரிசைப்படி குடியரசுத் தலைவர் நாட்டின் முதல் குடிமகன் ஆவார்.

### இரட்டைக் குடியுரிமை

அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய கூட்டாட்சி அமைப்புடைய நாடுகளில் இரட்டைக் குடியுரிமை வழங்கப் படுகிறது. ஒன்று தேசியக் குடியுரிமை மற்றொன்று மாநில குடியுரிமை.

### வெளிநாடு வாழ் இந்தியர் (NRI - Non Resident Indian)

இவர்கள், இந்தியக் கடவுச் சீட்டினைப் (Passport) பெற்று வெளிநாட்டில் வசிக்கும் இந்தியக் குடிமக்கள் ஆவர்.

### இந்திய பூர்வீகக் குடியினர் (PIO-Person of Indian Origin)

இந்தியக் குடியுரிமையுடைய மூதாதையர்களைக் கொண்ட, வெளிநாட்டில் (பாகிஸ்தான், வங்காளதேசம், ஸ்ரீலங்கா, பூடான், ஆப்கானிஸ்தான், சீனா, நேபாளம் நீங்கலாக) குடியுரிமையைப் பெற்றிருக்கும் ஒருவர் இந்திய பூர்வீகக் குடியினர் ஆவர். 2015 ஜனவரி 9 முதல் PIO முறை இந்திய அரசால் திரும்பப் பெறப்பட்டு OCI முறையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

### வெளிநாட்டுக் குடியுரிமையுடைய, இந்தியாவில் வசிப்பதற்கான அட்டை வைத்திருப்பவர்

### (OCI-Overseas Citizen of India Card Holder)

இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட வெளிநாட்டுக் குடிமகன் (பாகிஸ்தான், வங்காளதேசம் நீங்கலாக) காலவரையின்றி இந்தியாவில் வசிப்பதற்கும், பணி செய்வதற்கும் OCI அட்டையைப் பெறுகிறார். இவர்களுக்கு இந்தியாவில் வாக்களிக்கும் உரிமை இல்லை.

### இந்தியக் குடிமக்களின் உரிமைகளும், கடமைகளும்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் கீழ்க்கண்ட உரிமைகளை நமக்கு வழங்குகிறது.

* அடிப்படை உரிமைகள்
* மக்களவை தேர்தல் மற்றும் மாநில சட்டமன்ற தேர்தல் ஆகியவற்றிற்கு வாக்களிக்கும் உரிமை.
* இந்திய அரசு அலுவலகங்களில் பணிபுரியும் உரிமை. இந்தியப் பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றம் ஆகியவற்றில் உறுப்பினராவதற்கான உரிமை.

இந்திய அரசியலமைப்பு 42–ஆவது சட்டத் திருத்தத்தின்படி இந்தியக் குடிமக்களுக்கான அடிப்படை கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

### குடிமக்கள் அல்லாதவர்களின் வகைகள்

ஒரு நாட்டின் குடிமக்கள் அல்லாதவர்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

**1. அந்நியர் (Alien)**

ஒரு நாட்டில் வசிக்கும் குடிமகன் அல்லாத அனைவரும் அந்நியர் எனப்படுவர்.

(எ.கா) வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டு மாணவர்கள்.

**2. குடியேறியவர் (Immigrant)**

ஒரு நாட்டில் எவ்வித தடையுமின்றி நிரந்தரமாக வசிப்பதற்கும், பணிபுரிவதற்கும் உரிமை பெறும் அந்நியர் '**குடியேறியவர்**' எனப்படுகிறார்.

### நற்குடிமகனின் பண்புகள்

✦ அரசியலமைப்புச் சட்டத்தின்படி நடத்தல்.
✦ சட்டத்திற்குக் கீழ்ப்படிதல்.
✦ சமுதாயத்திற்கு தன் பங்களிப்பை ஆற்றுதல்.
✦ குடிமைப் பணியை செயலாற்றுதல்.
✦ நற்பண்புகளையும் நீதியையும் நிலைநாட்டுதல்.
✦ வேற்றுமைகளை மறந்து நடத்தல்.

### வெளிநாடு வாழ் இந்தியர் தினம் (பிரவாசி பாரதிய தினம்)

இந்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் பிரவாசி பாரதிய தினம் கொண்டாடப்படுகிறது. இந்த தினம் இந்தியாவின் வளர்ச்சிக்காக வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களின் பங்களிப்பினை பெறும் வகையில் கொண்டாடப்படுகிறது.

இது மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு வருகை புரிந்த தினமான **ஜனவரி 9–ஆம் நாள்** கொண்டாடப்படுகிறது.

### கூடுதல் தகவல்கள்

* **நாட்டுரிமை** : பூர்வீகம், பிறப்பு மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நாட்டினர் இயல்பாக பெறும் நிலை 'நாட்டுரிமை' எனப்படுகிறது.
* **குடியுரிமை** : சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு ஒரு நாட்டின் அரசாங்கத்தால் தனி ஒரு நபருக்கு வழங்கப்படுவது 'குடியுரிமை' எனப்படுகிறது.
* ஒருவர் தனது நாட்டுரிமையை மாற்ற முடியாது. ஆனால் தனது குடியுரிமையை மாற்ற முடியும்.

### அடிப்படை உரிமைகள்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி III–இல் 12 முதல் 35 வரையுள்ள சட்டப் பிரிவுகள் அடிப்படை உரிமைகள் பற்றி கூறுகின்றன. இந்த அடிப்படை உரிமைகள், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகளின் தாக்கத்தால் உருவாக்கப்பட்டவை. இந்திய அரசியலமைப்பில் முதலில் ஏழு அடிப்படை உரிமைகள் இருந்தன. ஆனால் தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் மட்டுமே உள்ளன. இந்திய அரசியலமைப்பின் பகுதி III '**இந்தியாவின் மகாசாசனம்**' என அழைக்கப்படுகிறது.

1978–ஆம் ஆண்டு, 44–ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி, அடிப்படை உரிமைகள் பட்டியலிலிருந்து சொத்துரிமை (பிரிவு 31) நீக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி XII–இல் பிரிவு 300A–யின் கீழ் சொத்துரிமையானது ஒரு சட்ட உரிமையாக வைக்கப்பட்டுள்ளது.

**I. சமத்துவ உரிமை**

பிரிவு 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
பிரிவு 15 – மதம், இனம், பாலினம் மற்றும் பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவதை தடைசெய்தல்.
பிரிவு 16 – பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்.
பிரிவு 17 – தீண்டாமையை ஒழித்தல்.
பிரிவு 18 – இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்.

**II. சுதந்திர உரிமை**

பிரிவு 19 – பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் மற்றும் தொழில் செய்யும் உரிமை.

# தமிழ்நாடு - முதலமைச்சர்கள் பட்டியல்

| முதலமைச்சர்களின் பெயர் | கட்சி | பதவிக்காலம் |
|---|---|---|
| ஏ. சுப்பராயலு | நீதிக்கட்சி | 17 டிசம்பர், 1920 - 11 ஜூலை, 1921 |
| பனகல் ராஜா | நீதிக்கட்சி | 11 ஜூலை, 1921 - 3 டிசம்பர், 1926 |
| பி. சுப்பராயன் | சுயேச்சை | 4 டிசம்பர், 1926 - 27 அக்டோபர், 1930 |
| பி. முனுசுவாமி நாயுடு | நீதிக்கட்சி | 27 அக்டோபர், 1930 - 4 நவம்பர், 1932 |
| ராமகிருஷ்ண ரங்காராவ் | நீதிக்கட்சி | 5 நவம்பர், 1932 - 4 ஏப்ரல், 1936 |
| பி. டி. இராஜன் | நீதிக்கட்சி | 4 ஏப்ரல், 1936 - 24 ஆகஸ்டு, 1936 |
| ராமகிருஷ்ண ரங்காராவ் | நீதிக்கட்சி | 24 ஆகஸ்டு, 1936 - 1 ஏப்ரல், 1937 |
| கூர்மா வெங்கட ரெட்டி நாயுடு | நீதிக்கட்சி | 1 ஏப்ரல், 1937 - 14 ஜூலை, 1937 |
| சி. இராஜகோபாலாச்சாரி | காங்கிரஸ் | 14 ஜூலை, 1937 - 29 அக்டோபர், 1939 |
| த. பிரகாசம் | காங்கிரஸ் | 30 ஏப்ரல், 1946 - 23 மார்ச், 1947 |
| ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் | காங்கிரஸ் | 23 மார்ச், 1947 - 6 ஏப்ரல், 1949 |
| பி.எஸ். குமாரசுவாமி ராஜா | காங்கிரஸ் | 6 ஏப்ரல், 1949 - 26 ஜனவரி, 1950 |
| பி.எஸ். குமாரசுவாமி ராஜா | காங்கிரஸ் | 26 ஜனவரி, 1950 - 9 ஏப்ரல், 1952 |
| சி. இராசகோபாலச்சாரியர் | காங்கிரஸ் | 10 ஏப்ரல், 1952 - 13 ஏப்ரல், 1954 |
| கே. காமராஜ்* | காங்கிரஸ் | 13 ஏப்ரல், 1954 - 02 அக்டோபர், 1963 |
| எம். பக்தவச்சலம் | காங்கிரஸ் | 02 அக்டோபர், 1963 - 06 மார்ச், 1967 |
| சி.என். அண்ணாதுரை | திமுக | 06 மார்ச், 1967 - 03 பிப்ரவரி, 1968 |
| மு. கருணாநிதி* | திமுக | 10 பிப்ரவரி, 1969 - 31 ஜனவரி, 1976 |
| எம்.ஜி. இராமச்சந்திரன்* | அஇஅதிமுக | 30 ஜூன், 1977 - 24 டிசம்பர், 1987 |
| திருமதி. ஜானகி இராமச்சந்திரன் | அஇஅதிமுக | 07 ஜனவரி, 1988 - 30 ஜனவரி, 1988 |
| மு. கருணாநிதி | திமுக | 27 ஜனவரி, 1989 - 30 ஜனவரி, 1991 |
| செல்வி. ஜெ.ஜெயலலிதா | அஇஅதிமுக | 24 ஜூன், 1991 - 12 மே, 1996 |
| மு. கருணாநிதி | திமுக | 12 மே, 1996 - 12 மே, 2001 |
| ஓ. பன்னீர்செல்வம் | அஇஅதிமுக | 21 செப்டம்பர், 2001 - 01 மார்ச், 2002 |
| செல்வி. ஜெ.ஜெயலலிதா | அஇஅதிமுக | 02 மார்ச், 2002 - 12 மே, 2006 |
| மு. கருணாநிதி | திமுக | 13 மே, 2006 - 15 மே, 2011 |
| செல்வி. ஜெ. ஜெயலலிதா | அஇஅதிமுக | 16 மே, 2011 - 27 செப்டம்பர், 2014 |
| ஓ. பன்னீர்செல்வம் | அஇஅதிமுக | 28 செப்டம்பர், 2014 - 23 மே, 2015 |
| செல்வி. ஜெ. ஜெயலலிதா | அஇஅதிமுக | 23 மே, 2015 - 05 டிசம்பர், 2016 |
| ஓ. பன்னீர்செல்வம் | அஇஅதிமுக | 06 டிசம்பர், 2016 - 16 பிப்ரவரி, 2017 |
| எடப்பாடி கே. பழனிச்சாமி | அஇஅதிமுக | 16 பிப்ரவரி, 2017 – 6 மே, 2021 |
| மு.க. ஸ்டாலின் | திமுக | 7 மே, 2021 – 5 மே, 2026 |
| ச. ஜோசப் விஜய் | தவெக | 10 மே, 2026 – முதல் |

* தொடர்ச்சியாக பதவி வகித்த ஆண்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இடையில் தற்காலிகமாக குடியரசுத்தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டிருக்கலாம்.

## மக்களவை உறுப்பினர்கள் எண்ணிக்கை

| வ.எண் | மாநிலம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஆந்திரப் பிரதேசம் | 25 |
| 2. | தெலுங்கானா | 17 |
| 3. | அருணாச்சலப் பிரதேசம் | 2 |
| 4. | அசாம் | 14 |
| 5. | பீஹார் | 40 |
| 6. | சத்தீஸ்கர் | 11 |
| 7. | கோவா | 2 |
| 8. | குஜராத் | 26 |
| 9. | ஹரியானா | 10 |
| 10. | இமாச்சலப் பிரதேசம் | 4 |
| 11. | கர்நாடகா | 28 |
| 12. | கேரளா | 20 |
| 13. | மத்தியப் பிரதேசம் | 29 |
| 14. | மகாராஷ்டிரா | 48 |
| 15. | மணிப்பூர் | 2 |
| 16. | மேகாலயா | 2 |
| 17. | மிசோரம் | 1 |
| 18. | நாகலாந்து | 1 |
| 19. | ஒடிஸா | 21 |
| 20. | பஞ்சாப் | 13 |
| 21. | இராஜஸ்தான் | 25 |
| 22. | சிக்கிம் | 1 |
| 23. | தமிழ்நாடு | 39 |
| 24. | திரிபுரா | 2 |
| 25. | உத்திரப்பிரதேசம் | 80 |
| 26. | உத்திரகாண்ட் | 5 |
| 27. | மேற்கு வங்காளம் | 42 |
| 28. | ஜார்கண்ட் | 14 |

| வ.எண் | யூனியன் பிரதேசம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அந்தமான் நிக்கோபார் தீவுகள் | 1 |
| 2. | சண்டிகர் | 1 |
| 3. | தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி & டாமன் மற்றும் டையூ | 2 |
| 4. | ஜம்மு & காஷ்மீர் | 5 |
| 5. | இலட்சத் தீவுகள் | 1 |
| 6. | டெல்லி | 7 |
| 7. | புதுச்சேரி | 1 |
| 8. | லடாக் | 1 |

**1952 முதல் 2024 வரை நடைபெற்ற மக்களவைத் தேர்தலின் சில புள்ளிவிவரங்கள்**

| பொதுத்தேர்தல் (ஆண்டு) | வேட்பாளர்களின் எண்ணிக்கை | வாக்காளர்கள் (மில்லியனில்) | பதிவான வாக்கு சதவீதம் | வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1–ஆவது தேர்தல் (1952) | 1,874 | 173.21 | 45.7 | 1,96,084 |
| 2–ஆவது தேர்தல் (1957) | 1,519 | 193.65 | 45.74 | 2,20,478 |
| 3–ஆவது தேர்தல் (1962) | 1,985 | 217.68 | 55.42 | 2,38,244 |
| 4–ஆவது தேர்தல் (1967) | 2,369 | 274.60 | 61.33 | 2,67,255 |
| 5–ஆவது தேர்தல் (1971) | 2,784 | 274.09 | 55.29 | 3,42,944 |
| 6–ஆவது தேர்தல் (1977) | 2,439 | 321.17 | 60.49 | 3,58,208 |
| 7–ஆவது தேர்தல் (1980) | 4,462 | 363.94 | 56.92 | 4,34,442 |
| 8–ஆவது தேர்தல் (1984) | 5,493 | 400.10 | 64.1 | 5,05,751 |
| 9–ஆவது தேர்தல் (1989) | 6,160 | 499.00 | 62.0 | 5,89,449 |
| 10–ஆவது தேர்தல் (1991) | 8,699 | 514.00 | 61.0 | 5,94,797 |
| 11–ஆவது தேர்தல் (1996) | 13,952 | 592.57 | 57.94 | 7,66,462 |
| 12–ஆவது தேர்தல் (1998) | 4,750 | 605.58 | 61.97 | 7,73,494 |
| 13–ஆவது தேர்தல் (1999) | 4,648 | 605.88 | 59.99 | 7,75,000 |
| 14–ஆவது தேர்தல் (2004) | 5,435 | 671.00 | 57.86 | 6,87,402 |
| 15–ஆவது தேர்தல் (2009) | 8,070 | 713.77 | 58.4 | 8,34,944 |
| 16–ஆவது தேர்தல் (2014) | 8,251 | 834.08 | 66.44 | 9,27,553 |
| 17–ஆவது தேர்தல் (2019) | 8,039 | 896.00 | 67.11 | 10,35,000 |
| 18–ஆவது தேர்தல் (2024) | 8,360 | 968.8 | 64.98 | 10,48,202 |

# இந்தியப் பொருளாதாரம் மற்றும் தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம்

- பொருளாதாரம் – ஓர் அறிமுகம்
- பணம், சேமிப்பு, கடன் மற்றும் முதலீடுகள்
- பொது மற்றும் தனியார் துறைகள்
- இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு
- வேளாண்மை
- இடம்பெயர்தல்
- மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி
- உலகமயமாதல் மற்றும் வர்த்தகம்
- அரசாங்கமும் வரிகளும்
- ஐந்தாண்டுத் திட்ட மாதிரிகள் – மதிப்பீடு
- தொழில் வளர்ச்சி
- தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்
- பணவியல் பொருளியல்
- வங்கியியல்
- நிதிப் பொருளியல்
- பன்னாட்டு பொருளாதார அமைப்புகள்
- மத்திய அரசினால் கொண்டுவரப்பட்டுள்ள புதிய திட்டங்கள்
- தமிழ்நாடு மாநில உருவாக்கம்
- தமிழகத்தில் சமூக மறுமலர்ச்சி இயக்கங்களின் பங்களிப்பு
- தமிழகத்தில் அரசியல் வளர்ச்சி
- இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கான நியாயங்களும் சமூக வளங்களைப் பெறும் வாய்ப்புகளும்
- சமூகநலத் திட்டங்களின் தாக்கமும் பங்களிப்பும் மற்றும் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகள்
- தமிழகத்தில் கல்வி, சமூகநீதி மற்றும் நலவாழ்வு முறைகள்
- தமிழகப் புவியியல் கூறுகளும் பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் தாக்கமும்
- பல்வேறு துறைகளில் தமிழகம் நிகழ்த்தியுள்ள சாதனைகள்
- தமிழகத்தில் மின் –ஆளுகை
- தமிழக அரசின் புதிய திட்டங்கள் (2021 – 2026)
- தமிழக பட்ஜெட் 2026 – 27
- தமிழக வேளாண் பட்ஜெட் 2026 – 27

# பொருளாதாரம்

## பொருளாதாரம் - ஓர் அறிமுகம்

**சந்தை**

கிராமங்களில் வாரம் அல்லது மாதம் ஒரு முறை பொதுவான ஓர் இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் மக்களின் தேவைக்கேற்ப குறிப்பிட்ட பொருள்களை ஒருங்கிணைத்து விற்பனை செய்யுமிடம்.

**நுகர்வோர் :** பொருட்களைப் பயன்படுத்துவோர்.

**நுகர்வோர் பொருட்கள்**

அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மக்கள் அங்காடியிலிருந்து வாங்கிப் பயன்படுத்தும் பொருட்கள் நுகர்வோர் பொருட்கள் எனப்படுகின்றன. (எ.கா) அரிசி, துணிகள், மிதி வண்டிகள், காய்கறிகள்.

**சேமிப்பு**

கையில் கிடைக்கும் வருமானத்தில் நுகர்வுக்குச் செலவு செய்தது போக, எதிர்காலத் தேவைக்காக ஒதுக்கப்படும் ஒரு தொகையாகும்.

**முதல்நிலைத் தொழில்கள்**

- உணவுத் தேவைக்கும், தொழில் உற்பத்திக்கும் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்வது **'முதல் நிலைத் தொழில்கள்'** ஆகும்.

  (எ.கா) வேளாண்மை, கால்நடைகள் வளர்த்தல், மீன்பிடித்தல், கனிமங்கள் மற்றும் தாதுப் பொருள்கள் போன்றவற்றை சேகரித்தல்.
- கனிகள், கொட்டைகள், தேன், மூலிகைகள், ரப்பர் பிசின் போன்றவற்றை சேகரித்தல், மரம் வெட்டுதல்.

**இரண்டாம் நிலைத் தொழில்கள்**

- வேளாண் அடிப்படைத் தொழிற்சாலைகள் – பருத்தி, சர்க்கரை, உணவு பதப்படுத்துதல்
- முதல் நிலைத் தொழில்கள் மூலம் சேகரிக்கப்படும் மூலப்பொருள்களில் இருந்து இயந்திரங்கள் முதல் அன்றாடத் தேவைக்கான பொருட்கள் வரை பெருமளவில் உற்பத்தி செய்தல் ஆகும். இது **'தொழில் துறை'** என்றும் அழைக்கப்படுகின்றது.
- காடு சார்ந்த தொழிற்சாலைகள் – காகிதத் தொழில், மரச்சாமான்கள், கட்டுமானப் பொருட்கள்
- கனிமத் தொழிற்சாலைகள் – சிமெண்ட், இரும்பு, அலுமினியம் போன்ற தொழிற்சாலைகள்
- கடல் சார்ந்த தொழிற்சாலைகள் – கடல் உணவு பதப்படுத்துதல்

**மூன்றாம் நிலைத் தொழில்கள்**

- உற்பத்திப் பொருள்களை தேவையான மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கு தேவையான சேவைகளை வழங்குவதால் இவை **'சேவைத் துறை தொழில்கள்'** என்றும் அழைக்கப்படுகின்றன.
- போக்குவரத்து – சாலை, இரயில், கடல், ஆகாயப் போக்குவரத்துகள்
- தொலைத் தொடர்பு – அஞ்சல், தொலைபேசி, தகவல் தொழில்நுட்பம்
- வர்த்தகம் – பொருள்களைக் கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல்
- வங்கி – பணப் பரிமாற்றம், வங்கி சேவை

**உற்பத்தி**

நுகர்வோரின் பயன்பாட்டிற்காக, மூலப்பொருளையும் மூலப்பொருள் அல்லாதனவற்றையும் ஒன்றிணைத்து ஒரு பொருளை உருவாக்கும் செயலே உற்பத்தியாகும்.

**பயன்பாட்டின் வகைகள்**

| வடிவப் பயன்பாடு | இடப் பயன்பாடு | காலப் பயன்பாடு |
|---|---|---|
| ஒரு விளைபொருளின் வடிவம் மாற்றப்படுவதால், அதன் பயன்பாடு மிகுதியாகிறது. | ஒரு விளைபொருள், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லப்படும் போது அதன் பயன்பாடு மிகுதியாகிறது. | ஒரு விளைபொருளை எதிர்காலத் தேவைக்காகச் சேமித்து வைக்கும் போது அதன் பயன்பாடு மிகுதியாகிறது. |
| (எ.கா) பருத்தியைக் கொண்டு ஆடைகள் தயாரிக்கப்படுகிறது. | (எ.கா) தமிழ்நாட்டில் இருந்து அரிசியைப் பிறமாநிலங்களுக்கு எடுத்துச் செல்வது. | (எ.கா) நெல், கோதுமை போன்றவற்றை கிடங்குகளில் சேமித்து வைப்பது. |

**உற்பத்தியின் வகைகள்**

| முதன்மை நிலை உற்பத்தி | இரண்டாம் நிலை உற்பத்தி | மூன்றாம் நிலை உற்பத்தி |
|---|---|---|
| இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களை, நேரடியாகப் பயன்படுத்திச் செய்கின்ற செயல்பாடுகளுக்கு உட்பட்ட நிலை முதன்மைநிலை உற்பத்தி ஆகும். | முதன்மை நிலையின் உற்பத்திப் பொருள்களை மூலப்பொருள்களாகப் பயன்படுத்தி புதிய பொருள்களாக உருவாக்கும் செயல்பாடு இரண்டாம் நிலை உற்பத்தி ஆகும். | முதன்மை நிலை, இரண்டாம் நிலைகளின் உற்பத்திப் பொருள்களைச் சேகரிப்பதும் பரிமாற்றம் செய்வதும் மூன்றாம் நிலை உற்பத்தி ஆகும். |
| வேளாண்மைக்கு முதலிடம் அளிக்கப்படுவதால், இது **'வேளாண்மைத் துறை உற்பத்தி'** என்று அழைக்கப்படுகிறது. | தொழிலுக்கு முதலிடம் அளிக்கப்படுவதால் இது **'தொழில்துறை உற்பத்தி'** என்று அழைக்கப்படுகிறது. | சேவைக்கு முதலிடம் அளிக்கப்படுவதால், **'சேவைத்துறை உற்பத்தி'** என்று அழைக்கப்படுகிறது. |
| வேளாண்மை, வனங்களைப் பாதுகாத்தல், மீன்பிடித்தல், சுரங்கத் தொழில், எண்ணெய் வளங்களைப் பிரித்தெடுத்தல் முதன்மை நிலை உற்பத்திகளாகும். | இரும்புத்தாதுவிலிருந்து பொருள்களைத் தயாரித்தல், ரொட்டி தயாரித்தல், ஆடைகள், நான்கு சக்கர வண்டிகள் தயாரித்தல், கட்டடப் பணிகள் சார்ந்த தொழில்கள், பொறியியல் போன்றவை இரண்டாம் நிலை உற்பத்திகளாகும். | வாணிபம், வங்கி, காப்பீடு, போக்குவரத்து, செய்தித் தொடர்பு, சட்டம், நிர்வாகம், கல்வி, உடல்நலப் பாதுகாப்பு போன்றவை மூன்றாம் நிலை உற்பத்திகளாகும். |

## உற்பத்திக்கான காரணிகள்




## நிலம்

'நிலம்' என்ற உற்பத்திக் காரணி, இயற்கை வளங்கள் அனைத்தையும் அல்லது இயற்கை மனிதனுக்கு இலவசமாகக் கொடுத்திருக்கும் கொடை அனைத்தையும் குறிப்பதாகும்.

நிலப்பரப்பு, நீர், காற்று, கனிம வளங்கள், காடுகள், ஆறுகள், ஏரிகள், கடல்கள், மலைகள், தட்பவெப்பநிலை, காலநிலை ஆகிய அனைத்தும் 'நிலம்' என்ற சொல்லுக்குள் அடங்குகின்றன.

### நிலத்தின் சிறப்பியல்புகள்

1. **நிலம் இயற்கையின் கொடை :** நிலமானது மனித உழைப்பினால் உருவானதன்று. மனிதனின் பரிணாம வளர்ச்சி தொடங்குவதற்கு முன்பே தோன்றியதாகும்.
2. **நிலத்தின் அளிப்பு நிலையானது :** நிலத்தின் செழிப்பை உயர்த்த முடியுமே தவிர, அதனுடைய மொத்த பரப்பளவையும் எந்த மாற்றத்திற்கும் உட்படுத்த இயலாது.
3. **நிலம் அழிவில்லாதது :** மனிதனால் உருவாக்கப்பட்ட அனைத்து பண்டங்களும் அழிந்து போகக் கூடியவை ஆனால் நிலம் அழிவில்லாதது.
4. **நிலம் ஒரு முதன்மை உற்பத்திக் காரணி :** மனிதர்கள் உற்பத்தி செய்கின்ற எந்தவொரு உற்பத்தி பொருளுக்கும் நிலமே அடிப்படையாக அமைகிறது.
5. **நிலம் இடம்பெயரக்கூடியதன்று :** நிலத்தை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்ல முடியாது.
6. **நிலம் ஆற்றல் வாய்ந்தது :** மனிதனால் அழிக்க முடியாத ஆற்றல்கள் சிலவற்றை நிலம் கொண்டுள்ளது. இயற்கையில் ஏற்படும் மாற்றங்களால் நிலத்தின் செழிப்புத் தன்மையில் மாற்றம் ஏற்படலாம். ஆனால் அதனை முழுமையாக அழிக்க முடியாது.
7. **நிலம் செழிப்புத் தன்மையில் மாறுபடும் :** நிலத்தின் செழிப்புத் தன்மையில் மாறுபாடு இருப்பதால் உற்பத்தித் திறனும் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.

## உழைப்பு

**ஆல்பிரட் மார்ஷலின் விளக்கம்**

"வேலையினால் ஏற்படும் துன்பத்தைக் கருதாமல், கைமாறு எதிர்பார்த்து முழுமையாகவோ, பகுதியாகவோ உடல் அல்லது மனதால் பயன் கருதி மேற்கொள்ளும் முயற்சியே உழைப்பு ஆகும்."

### உழைப்பின் சிறப்பியல்புகள்

♦ உழைப்பு அழியக்கூடியது. அதாவது உழைப்பை சேமித்து வைக்க இயலாது.

♦ உற்பத்தியில் உழைப்பு என்பது ஒரு செயற்படு காரணியாகும். நிலமோ, மூலதனமோ உழைப்பில்லாமல் அதிக உற்பத்தியை அளிக்க இயலாது.

♦ உழைப்பு ஒரே சீரானதல்ல. திறமையும் பயிற்சியும் நபருக்கு நபர் மாறுபடுகின்றன.

♦ உழைப்பாளர்களிடமிருந்து உழைப்பை பிரிக்க இயலாது. உழைப்பு இடம் பெயரக்கூடியது. அதிக ஊதியத்திற்காக மனிதர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இடம்பெயர்கிறார்கள்.

♦ தனியாக உழைக்கும் உழைப்பாளரிடம் பேரம் பேசும் ஆற்றல் குறைவு. தொழிற்சங்கம் மூலமாகவே ஊதிய உயர்விற்காக பேரம் பேசும் ஆற்றல் அதிகரிக்கிறது.

## வேலைபகுப்பு முறை

"நாடுகளின் செல்வமும், அவற்றை உருவாக்குகிற காரணிகளும்" என்ற தனது நூலின் மூலம் ஆடம்ஸ்மித் வேலை பகுப்பு முறையை அறிமுகப்படுத்தியுள்ளார். ஓர் உற்பத்தியை நன்கு வரையறுக்கப்பட்ட வெவ்வேறு உட்பிரிவுகளாகப் பிரித்து, அந்த உட்பிரிவுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்பாளி அல்லது உழைப்பாளர் குழுவினரிடம் ஒப்படைத்தலே 'வேலை பகுப்பு முறை' எனப்படும்.

### வேலை பகுப்பு முறையின் நன்மைகள்

உழைப்பாளி ஒருவர், ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்வதனால், அந்த வேலையில் திறமையுடையவராக ஆகின்றார். இம்முறையில் நவீன இயந்திரங்களை உற்பத்தியில் அதிகமாக ஈடுபடுத்துவதற்கு வழி வகுக்கிறது. (எ.கா.) கம்பியில்லா தந்தி கண்டுபிடிப்பு

♦ காலமும் மூலப்பொருள்களும் மிகத் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

### வேலை பகுப்பு முறையின் தீமைகள்

தொழிலாளி, ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்வதால் களிப்பற்ற தன்மையை அடைகிறார். இது மனிதத் தன்மையை அழிக்கிறது. ஒரு பகுதி வேலையை மட்டுமே செய்வதால், தொழிலாளி, அவ்வேலை குறித்த பரந்துபட்ட அறிவையும் திறமையையும் பெறமுடிவதில்லை. இதனால் வேலைவாய்ப்பின்மை பெருகுகிறது. கைவினைப் பொருள்களின் வளர்ச்சியைப் பாதிக்கிறது. ஒரு பொருளினை முழுவதுமாக உருவாக்கிய மன நிறைவை தொழிலாளி பெற முடியாது.

## மூலதனம்

**வரையறைகள் :** மூலதனம் என்பது பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக மனித முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும். எளிமையாகக் கூறினால் மூலதனம் என்பது செல்வத்தைக் குறிக்கிறது.

செல்வத்தை உற்பத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட செல்வம் மூலதனம் ஆகும். மார்ஷலின் கருத்துப்படி, "இயற்கையின் கொடை தவிர்த்த, வருமானம் அளிக்கக்கூடிய பிறவகை செல்வங்களே மூலதனம் ஆகும்."

### மூலதனத்தின் வடிவங்கள்

1. பருமப் பொருள் அல்லது பொருட்சார் மூலதனம்
   (எ.கா) இயந்திரங்கள், கருவிகள், கட்டடங்கள் போன்றவை.
2. பணமூலதனம் அல்லது பணவியல் வளங்கள்
   (எ.கா) வங்கி வைப்புகள், பங்குகள் மற்றும் பத்திரங்கள் போன்றவை.
3. மனித மூலதனம் அல்லது மனிதத்திறன் வளங்கள்
   (எ.கா) கல்வி, பயிற்சி மற்றும் சுகாதாரம்

### மூலதனத்தின் சிறப்பியல்புகள்

♦ மூலதனம் செயலற்ற ஓர் உற்பத்திக் காரணி.

♦ மனித முயற்சியால் உருவாக்கப்படுகிறது.

♦ இது உற்பத்தியில் தவிர்க்க முடியாத காரணியல்ல. இது இல்லாமலும் உற்பத்தி நடைபெறும்.

♦ மூலதனம் அதிகம் இயங்கும் தன்மையுடையது.

♦ இதன் அளிப்பு நெகிழும் தன்மையுடையது.

♦ பல ஆண்டுகள் நீடிக்கும் தன்மையுடையது.

♦ மூலதனம் ஆக்கமுடையது.

♦ எதிர்காலத்தில் வருமானம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் மூலதனம் ஈடுபடுத்தப்படுகிறது.

## தொழில் முனைவோர் (அல்லது) தொழிலமைப்பு

நிலம், உழைப்பு, மூலதனம் போன்ற பல உற்பத்திக் காரணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுபவர் 'தொழில் முனைவோர்' எனப்படுகிறார்.

தொழில் முனைவோர் 'தொழில் அமைப்பாளர்' என்றும் அழைக்கப்படுகிறார். தற்காலத்தில் **'சமுதாய மாற்றம் காணும் முகவர்'** என அழைக்கப்படுகிறார்.

### தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள்

- இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காணுதல்
- உற்பத்தி அலகின் இருப்பிடத்தைத் தீர்மானித்தல்.
- புதுமைகளை உருவாக்குதல்
- வெகுமதி செலவைத் தீர்மானித்தல்
- இடர்களை ஏற்றல் மற்றும் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்ளல்.

### கூடுதல் தகவல்கள்

- நம் இந்தியாவில் கலப்பு பொருளாதார நிலை காணப்படுகிறது. அதாவது, பொருளாதாரத்தில் தனியார் துறை நிறுவனங்களும் பொதுத் துறை நிறுவனங்களும் ஒன்றாக இணைந்து செயல்படுகின்றன.
- நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், பெரும்பங்கு வகிப்பவை மூன்றாம் நிலை அல்லது சேவைத் துறை உற்பத்திகளே.

# பணம், சேமிப்பு, கடன் மற்றும் முதலீடுகள்

### பணம் – வரையறை

"பொது ஏற்புத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு பண்டங்கள் வாங்கும் போது அதற்கான செலுத்துத் தொகையாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய எதனையும் பணம் என்று கூறலாம்"

– **இராபர்ட்சன்**

### பணத்தின் பரிணாம வளர்ச்சி

'பணம்' (Money) என்ற சொல் "**மொனேட்டா ஜூனோ**" என்ற ரோம் மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டது. இது ரோமின் பெண் கடவுளைக் குறிக்கிறது. இந்தியாவில் '**ரூபாய்**' என்ற சொல் சமஸ்கிருத மொழியிலிருந்து பெறப்பட்டது. 'ரூபியா' என்றால் வெள்ளி நாணயம் என்று பொருளாகும்.

### பண்டமாற்று முறை

- கி.மு 9000–இல் மனிதன் பண்டமாற்று முறையை கையாண்டான். தன்னிடம் மிகுதியாக உள்ள பொருளைக் கொடுத்துத் தனக்குத் தேவையான இன்னொரு பொருளைப் பெற்றுக் கொண்டான்.
- தானியங்கள், கால்நடைகள், உப்பு ஆகியவைதான் பண்டமாற்றாகப் பரிமாறிக் கொள்ளப்பட்டன.
- நாகரிகங்கள் வளர்ச்சியடைந்த பகுதிகளில் பண்டமாற்று முறை செழித்தோங்கியது.
- பண்டமாற்றம் செய்யப்பட்ட பொருள்களே பன்னாட்டு வணிகத்தின் முதல் வடிவம் எனலாம்.
- சிந்துவெளி நாகரிகக் காலகட்டத்தில் காணப்பட்ட பொருள்கள் எகிப்து, ஈராக் (மெசபடோமியா) பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டன.

#### பண்டமாற்று முறையில் இருந்த சில குறைபாடுகள்

- இருமுகத் தேவை பொருத்தமின்மை
- பொதுவான மதிப்பின் அளவுகோல்
- பொருள்களின் பகுபடாமை
- செல்வத்தை சேமிப்பதற்கான சிரமங்கள்

### நாணயங்கள் (கி.மு.1100)

- சீனர்கள் இந்தக் காலக்கட்டத்தில் சிறு நாணயங்களைப் பயன்படுத்தி இருக்கிறார்கள்.
- இந்த நாணயங்கள் **வெண்கலத்தில்** செய்யப்பட்டிருந்தன.
- இந்தியப் பெருங்கடலை ஒட்டியுள்ள நாடுகளில் **சோழிகள்** பணமாகப் பயன்படுத்தப்பட்டன.

### பண்டப்பணம்

நாகரிகத்தின் தொடக்க காலத்தில் அனைவராலும் ஏற்கக்கூடிய எந்தப் பண்டம் பொதுவாகத் தேவைப்படுகிறதோ அந்தப் பண்டத்தை தேர்ந்தெடுத்து அதனைப் பணமாகப் பயன்படுத்தினர்.

(எ.கா) உரோமம், தோல், உப்பு, அரிசி, கோதுமை, பாத்திரங்கள், ஆயுதங்கள்.

### உலோகப் பணம்

மனித நாகரிகத்தின் முன்னேற்றத்தில் பண்டப்பணம் உலோகப் பணமாக மாறியது. காலப்போக்கில் பண்டமாற்று முறையில் ஏற்பட்ட சிக்கலின் காரணமாக பொதுவான மதிப்புள்ள ஒரு பொருளை நிர்ணயம் செய்தனர். இது பெரும்பாலும் உலோகமாகவே இருந்தது. தங்கம், வெள்ளி போன்றவை உலோகப் பணமாகப் பயன்பட்டன. உலோகத்தின் எடை மற்றும் துல்லியம் முத்திரையுடன் பரிமாற்ற கருவியாக செயல்பட்டன.

- தங்கம், வெள்ளி மற்றும் செம்பு ஆகிய உலோகங்கள் '**புராதனப் பணம்**' எனப்பட்டன.
- தங்கம், வெள்ளி ஆகிய இரு உலோகங்கள் '**இயற்கைப் பணம்**' எனப்பட்டன.
- பிற்காலச் சோழர் காலத்தில் வணிகக் குழுக்கள் தமக்கெனப் படைகள் வைத்துக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் காலத்தில் தமிழக வணிகர்களின் ஏற்றுமதித் தேவையை ஈடு செய்ய சிறு வணிகர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் கடன் உதவி அளித்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன.

**லிடியாவின் நாணயங்கள் :** பண்டைய வரலாற்று ஆசிரியரான ஹெரோடோடஸ் கி.மு.8–ஆம் நூற்றாண்டில் லிடியாவின் பேரரசர் மிடாஸ் வெளியிட்ட உலோக நாணயத்தைக் கண்டுபிடித்தார். ஆனால் லிடியாவை விட பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் தங்க நாணயங்கள் பயன்பாட்டில் இருந்தன. உலோக நாணயங்களை வெளியிட்ட முக்கிய நாடுகள் இந்தியா, சீனா மற்றும் மத்திய கிழக்கு லிடியா.

கி.மு. 6–ஆம் நூற்றாண்டில் முதன்முறையாக மஹாஜனபதங்கள் ஆட்சியில் பூரணாஸ், கர்ஷபணம், பனாஸ் போன்ற நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன.

**மௌரிய அரசர்கள் :** தங்கம், வெள்ளி, தாமிரம் (அ) ஈயம் போன்ற உலோக நாணயங்களை துளையிட்டு வெளியிட்டனர்.

**குஷாண அரசர்கள் :** இந்திய–கிரேக்க குஷாண அரசர்கள், கிரேக்க மரபுப்படி சித்திரங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்டனர்.

**டெல்லி சுல்தான்கள் :** 12–ஆம் நூற்றாண்டில் டெல்லி துருக்கி சுல்தான்கள் தங்கள் நாணயங்களில் இஸ்லாமிய எழுத்துகளைப் பொறித்து வெளியிட்டனர். தங்கம், வெள்ளி மற்றும் தாமிரத்தால் ஆன நாணயங்கள் **டாங்கா** என்றும் மதிப்பு குறைந்த நாணயங்கள் **ஜிட்டால்** என்றும் அழைக்கப்பட்டன.

**முகலாயப் பேரரசர்கள் :** 1526 முதல் முகலாயப் பேரரசு முழுப் பேரரசிற்கான நாணய அமைப்பை ஒருங்கிணைத்தது. இந்த சகாப்தத்தில் ஹுமாயூனை தோற்கடித்து ஆட்சியில் இருந்த சேர்ஷாசூரி, 178 கிராம் எடையுள்ள வெள்ளி நாணயத்தை வெளியிட்டார். அது '**ரூபியா**' எனப்பட்டது. மேலும், அவை 40 செப்புத் துண்டுகளாக அல்லது பைசாவாகப் பிரிக்கப்பட்டன. முகலாயக் காலம் முழுவதும் வெள்ளி நாணயம் பயன்பாட்டில் இருந்தது. அந்நாணயம் முகலாயர், மராத்தியர் மற்றும் ஆங்கிலேயர் காலம் வரை புழக்கத்தில் இருந்தது.

**ஆங்கிலேயர் காலம் :** 1717–இல் முகலாய பேரரசர் **பாருக்ஷாயர்** முகலாய நாணயத்தை பம்பாய் அச்சகத்தில் அச்சடிக்க ஆங்கிலேயர்களுக்கு அனுமதியளித்தார். ஆங்கில தங்க நாணயங்கள் '**கரோலினா**' எனவும், வெள்ளி நாணயங்கள் '**ஏஞ்ஜேலினா**' எனவும், செம்பு நாணயங்கள் '**கப்ரூன்**' எனவும், வெண்கல நாணயங்கள் **டின்னி** எனவும் அழைக்கப்பட்டன.

கி.பி 1250–இல் தங்க முலாம் பூசப்பட்ட நாணயங்கள் ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

### காகிதப் பணம்

கி.மு 600–இல் மத்தியதரைக்கடல் பகுதி முழுவதும் காகிதப் பணப்பரிவர்த்தனை பரவத் தொடங்கியது. **லிதியா** நாட்டு அரசர் **அலியாதீஸ்** வணிகப் பரிமாற்றத்திற்கு பணத்தைப் பயன்படுத்தப்போவதாக அறிவித்தார். இந்த நாடு இப்போது **துருக்கியின்** ஒரு பகுதியாக உள்ளது.

7.50 இலட்சம் ரூபாயாக, குறிப்பிட்ட நோய்களுக்கு 10 இலட்சம் ரூபாயிலிருந்து 12 இலட்சம் ரூபாயாக, அரிய நோய்களுக்குத் திரள் உதவி 10 இலட்சம் ரூபாயிலிருந்து 15 இலட்சம் ரூபாயாக உயர்வு; 838 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

✦ ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளுக்கு 47,240 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**நீதி நிர்வாகம்**

✦ சென்னை பிராட்வேயில் 160 நீதிமன்றங்களுடன் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் 1,375 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்; முன்நடவடிக்கைகளுக்கு 10 கோடி ரூபாய் .

✦ நீதி நிர்வாகத் துறைக்கு 2,486 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**சுற்றுலா**

✦ பிரத்யேக நிலையான சுற்றுலா வளர்ச்சி நிதி உருவாக்கப்படும்; இதற்கான சட்ட முன்வடிவு நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிமுகப்படுத்தப்படும் .

✦ மாமல்லபுரத்தை சர்வதேச சுற்றுலாத் தலமாக மேம்படுத்த ஒன்றிய அரசிடம் 200 கோடி ரூபாய் மானியம் கோரப்படுகிறது.

✦ காவிரி, வைகை மற்றும் தாமிரபரணி நதிகளில் நதிச் சுற்றுலா; 53 கோடி ரூபாய் .

✦ உள்ளூர் உணவு மற்றும் கலைப் பண்பாட்டை பிரபலப்படுத்தும் உணவு மற்றும் கலைத் திருவிழா; 20 கோடி ரூபாய்.

✦ மூத்த குடிமக்களுக்கு ஆண்டுதோறும் இலவசப் புனிதப் பயணம்; 20 கோடி ரூபாய் .

✦ திருக்கடையூர், நாகூர் மற்றும் வேளாங்கண்ணியில் ஆன்மீகப் பயணிகளுக்கான ஓய்வு இல்லங்கள் ; 60 கோடி ரூபாய்.

✦ மலையேற்றம், வனவிலங்கு சுற்றுலா, பறவை மற்றும் படகுப் பாதைகளை உள்ளடக்கிய 'சூழல் சுற்றுலா இயக்கம்' 25 கோடி ரூபாய்.

**கலை மற்றும் பண்பாடு**

✦ கிழக்கு கடற்கரைச் சாலையில் தமிழரின் பாரம்பரிய பண்பாட்டுத் தலங்கள் தரம் உயர்த்தப்படும் ; விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு 5 கோடி ரூபாய்.

✦ நாட்டுப்புறக் கலைஞர்கள் வாழ்வாதாரப் பாதுகாப்புத் திட்டம் – ஆண்டு தோறும் 200 கலைக் குழுக்களுக்கு 100 நாள் நிகழ்ச்சி வாய்ப்பு: 23 கோடி ரூபாய் .

✦ சுற்றுலா – கலை மற்றும் பண்பாட்டுத் துறைக்கு 775 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**தமிழ் வளர்ச்சி**

✦ 300 திருக்குறள்களை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் 500 தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குத் தலா 5,000 ரூபாய் ஊக்கத்தொகை.

✦ காயிதே மில்லத்தின் நினைவாக ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளில் புதிய விருது வழங்கப்படும் .

✦ தமிழ் அறிஞர்களுக்கான நிதியுதவி மேம்படுத்தப்படும் ; மாநில அளவிலான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்படும்.

✦ தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலம் தமிழ்ப் பெருந்திரள் மொழி மாதிரி (LLM) உருவாக்கப்படும்.

✦ கீழடி, ஆதிச்சநல்லூர், கொடுமணல், மயிலாடும்பாறை, சிவகளை, அழகன்குளம், அரிக்கமேடு, சாளுவன்குப்பம் மற்றும் காவேரிப்பூம்பட்டினம் உள்ளிட்ட தொல்லியல் தலங்களுக்குக் கல்விச் சுற்றுலா; 1 கோடி ரூபாய்.

**இந்து சமய அறநிலையம்**

✦ அடுத்த 5 ஆண்டுகளில் 3,000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி மற்றும் திருக்குடமுழுக்கு, 250 திருக்குளம் சீரமைப்பு மற்றும் 75 தேர்கள் சீரமைப்பு.

✦ 9,205 திருக்கோயில்களுக்கு அறங்காவலர் நியமன அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

✦ ஆயிரம் ஆண்டுகள் பழமையான 213 திருக்கோயில்கள் புனரமைக்கப்படுகின்றன; 418 கோடி ரூபாய்.

✦ இந்து சமய அறநிலையத் துறைக்கு 708 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.



# தமிழக வேளாண் பட்ஜெட் 2026-27

வேளாண்மை உள்பட 20 சார்பு துறைகளுக்கு ரூ.58,374 கோடியிலான பட்ஜெட்டை வேளாண் துறையின் அமைச்சர் ஆர்.வினோத் சட்டப்பேரவையில் 06.08.2026 அன்று தாக்கல் செய்தார். இது கடந்த ஆண்டை விட ரூ.12,713 கோடி அதிகமாகும்.

**வேளாண் பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் விவரம் வருமாறு.**

வீடுகளில் காய்கறிகள், பழங்கள், மூலிகைச் செடிகள் வளர்க்க வெற்றி இல்லத்தரசி வீட்டுத் தோட்டதிட்டம் ரூ.10 கோடியில் செயல்படுத்தப்படும். புளூ பெர்ரி, ரம்புட்டான், லிச்சி, டிராகன் பழம், அவகோடா, கிவி, மங்குஸ்தான், பேசன் பழம் ஆகியவற்றை தனிப் பயிராக சாகுபடி செய்ய ரூ. 1.82 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

வெங்காய விலை உயர்வைக் கட்டுப்படுத்த ரூ.22.80 கோடியில் 57,000 மெட்ரிக் டன் கொண்ட சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும்.

வேளாண் ட்ரோன்களை இயக்க 100 பெண்களுக்குப் பயிற்சி அளித்து இயக்கும் உரிமம் அளிக்கவும், அவர்களுக்கு 50 சதவீத மானியத்தில் ட்ரோன்கள் வழங்கவும் ரூ.2.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடலோர மாவட்டங்களில் உவர் நீருக்கு மேலே இருக்கும் நன்னீரைப் பயன்படுத்தி தோட்டக்கலைப் பயிர் சாகுபடியை ஊக்குவிக்க நீலப் பசுமைத் தோட்டக்கலைப் பூங்காக்கள் அமைக்கப்படும். இதற்கு நன்னீர் சேமிப்பு கிணறு அமைக்க ரூ. 1.5 லட்சம் மானியம் அளிக்கப்படும். விவசாயிகளின் பொருளாதார தற்சார்பை உறுதி செய்ய விவசாயிகள் வருமான மேம்பாட்டு ஆணையம் ரூ.23 கோடி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

**உழவர் 'ஏஐ' திட்டம் அறிமுகம்**

செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரவழி கற்றலுக்கு உரிய தொழில் நுட்பங்களை ஒருங்கிணைத்து வானிலை முன்னறிவிப்பு, மண்நலம் மற்றும் மண் வளம், நோய் மேலாண்மை, பருவநிலைக்கு ஏற்ற பயிர் என விதைப்பு முதல் அறுவடை வரையிலான அனைத்துத் தொழில்நுட்ப ஆலோசனைகளும் சேவைகளும் வழங்கப்படும்.

**ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு வேளாண் உதவித்தொகை திட்டம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் திட்டப் பலன்களைத் தடையின்றி அடையவும், நீராதாரங்களை உருவாக்கி உற்பத்தியை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ளவும், அண்ணல் அம்பேத்கர் வேளாண் உதவித் தொகை திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக 56.72 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவைச் சேர்ந்த குறு, சிறு விவசாயிகள் உயர்மதிப்பு வேளாண் திட்டங்களில் பயனாளி பங்களிப்புத் தொகை அவர்களுக்கு பெரும் சுமையாக இருப்பதால், அந்தச் சுமையைக் குறைத்து திட்டங்களின் பலனை அடையும் வகையில் இந்த திட்டத்தில் 30 சதவீதம் கூடுதல் மானியம் வழங்கப்படும். அதன்படி, மதிப்புக்கூட்டு இயந்திரங்கள், பண்ணை இயந்திரங்கள் போன்றவற்றுக்கு 70 சதவீத மானியமும், சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைக்க 80 சதவீத மானியம் வழங்கப்படும்.

**விவசாயிகளுக்கு தார்ப்பாய்கள் :** இயற்கை நிகழ்வுகளில் இருந்து விளைபொருள்கள் வீணாகாமல் பாதுகாக்கவும், தானியங்களை உலர்த்துவதற்கும் தார்ப்பாய்கள் வழங்கவும் ரூ.10 கோடி ஒதுக்கீடு. கரும்பு சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும், சாகுபடி செலவைக் குறைக்கவும் கரும்பு சாகுபடி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த ரூ. 9 கோடி நிதி ஒதுக்கீடு. ஊட்டச்சத்து மிகுந்த தளிர்க்கீரைகள் வளர்ப்பை முக்கிய நகரங்களில் ஊக்குவிக்க 20,000 தொகுப்புகள் வழங்கும் தமிழ்நாடு தளிர்க்கீரைகள் திட்ட செயல்படுத்த ரூ.1.20 கோடி ஒதுக்கீடு.

**விவசாயிகள் வேண்டுகோளின்படி வெளியான அறிவிப்புகள் :** சாமந்தி மலரில் பூக்கும் காலத்தை மாற்றுவதற்கு எல்.இ.டி. விளக்குகள் பயன்படுத்த ரூ.5 கோடி ஒதுக்கீடு. பசுமைக்குடில், நிழல்வலைக்குடிலில் சாகுபடி முறையை 3 லட்சம் சதுர மீட்டர் பரப்பில் பரவலாக்க ரூ.15.55 கோடி ஒதுக்கீடு, மா, கொய்யா போன்ற பழப்பயிர்களுக்கு பழ உறையும், வாழைக்கு குலை உறையும் வழங்க 2,500 ஏக்கரில் செயல்படுத்த ரூ. 2.50 கோடி ஒதுக்கீடு. மா, கொய்யா, தக்காளி, முருங்கை, சின்ன வெங்காயம் ஆகிய பயிர்களின் 23 தொகுப்புகளில் நன்னெறி வேளாண் நடைமுறைகளுடன் ஏற்றுமதியாளர்களுக்கு சந்தைகளுடன் வலுவான இணைப்புகள் ஏற்படுத்த ரூ.8.43 கோடியில் ஒதுக்கீடு.

**தென்னை விவசாயிகளுக்கு புதிய திட்டங்கள் :**

தென்னைக்கான சிறப்புத் திட்டத்துக்கு மொத்தம் ரூ.16 கோடி நிதி ஒதுக்கீடு, தென்னை சார்ந்த பொருள்களுக்கு லாபகரமான விலை கிடைக்கச் செய்யவும், நிலையான சந்தை வாய்ப்பை உருவாக்கவும் 'தமிழ்நாடு தென்னைப் பதப்படுத்தும் கழகம் ரூ.22.30 கோடியில் புதிதாக அமைக்கப்படும். உரிய நேரத்தில் கொப்பரை கொள்முதலுக்கு விலை ஆதரவுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

கிராமப்புற இளைஞர்கள், பெண்களுக்கு, 50 சிறிய அளவிலான காளான் உற்பத்திக் கூடங்கள் அமைக்க ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கீடு.

**சூரிய பம்புசெட்டுகளுக்கு மானியம் :** சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைக்க 1000 விவசாயிகளுக்கு ரூ.23 கோடி மானியம், புதிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்குவதற்கு 3 ஆண்டுகளுக்கு ரூ.30 கோடி ஒதுக்கீடு.

**தக்காளி விலை வீழ்ச்சியை தடுக்க திட்டம் :** விவசாயிகள், வேளாண் தொழில் முனைவோர், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிக வழிகாட்டுதல் வழங்க சென்னையில் வேளாண் வணிக வழிகாட்டு மையம் அமைக்க ரூ. 50 லட்சம் ஒதுக்கீடு.

துறைமுகம் மற்றும் விமான சேவை முனையங்களுக்கு அருகில் 500 மெட்ரிக் டன் குளிர்பதனக் கிடங்கு வசதிகள், பொது–தனியார் கூட்டாண்மை முறையில் ஏற்படுத்தப்படும்.

தக்காளி, வெங்காயம் போன்றவற்றில் ஏற்படும் விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க சந்தை இடையீட்டுத் திட்டம் விலை நிலைப்படுத்துதல் நிதியாக 4.26 கோடி ஒதுக்கீடு.

**கோழிக்கழிவில் இருந்து உரம் :** சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கோழிக் கழிவிலிருந்து உரம் தயாரித்தலுக்கான ஆராய்ச்சி மேற்கொள்ள ரூ. 1 கோடி ஒதுக்கீடு.

**பால் பண்ணைக்கு மானியம் :** விவசாய நிலமற்ற பட்டியல் இனத்தவருக்கு வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வாங்க கடன்கள் வழங்கப்படும். 5 கால்நடைகள் கொண்ட 500 நடுத்தர அளவிலான பால் பண்ணைகள் அமைக்க 25 சதவீதம் மூலதன மானியத்துடன் 75 சதவீதம் குறைந்த வட்டியில் நிறுவனக் கடனுதவி வழங்கப்படும்.

5000 சிறிய பால் பண்ணை அலகுகள் நிறுவுவதற்காக 4 சதவீத வட்டி மானியம் வழங்க ரூ.4 கோடி நிதி ஒதுக்கீடு.

**மக்கள் சேவகர் அஞ்சலையம்மாள் சிறு, குறு விவசாயி விருது**

நடப்பு நிதியாண்டில் சிறு, குறு விசாயிகளை ஊக்குவிக்க, மக்கள் சேவகர் அஞ்சலையம்மாள் பெயரில் மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள் உள்ளிட்ட 10 பயிர்களில் அதிக மகசூல் பெறும் 3 விவசாயிகளுக்கு முறையே ரூ.2,50,000, ரூ.1,50,000, ரூ.1,00,000 என 30 விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்க ரூ. 50 லட்சம் மாநில நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

**வெற்றி விவசாயி விருது :** நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி உள்ளிட்ட 9 பயிர்களில் 2 ஏக்கர் பரப்பளவில் பயிரிட்டு, அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு மாவட்ட அளவில் 'வெற்றி விவசாயி விருது' வழங்கப்படும். முதல் பரிசாக 50,000, 2–ம் பரிசாக 25,000 என 90 பரிசுகள் ரூ.67,50,000 மாநில நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.

**நம்மாழ்வார் விருது :** உயிர்ம வேளாண்மையை தமிழகத்தில் பரவலாக்குவதன் ஒரு பகுதியாக 2026–2027–ஆம் ஆண்டில் உயிர்ம வேளாண் முறையில் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளைச் சிறப்பிக்கும் வகையில், 'நம்மாழ்வார் விருது' 5 விவசாயிகளுக்கு வழங்கப்படும். பாராட்டுப் பத்திரத்துடன் தலா ரூ.2,00,000 ரொக்கமும் கொண்ட இந்த விருதுகளை வழங்க மாநில நிதியிலிருந்து ரூ.10,00,000 ஒதுக்கீடு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★★★